Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 23 சனிக்கிழமை (08.09.2012) பக்கங்கள் 20 ஓசை – 342

விஷானி நகை மாளிகை




இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

பாடசாலையில் தொடர்பாடல் ஊடகக்கற்கை 05



108 இற்கு 3073 போட்டி 06




கால்பந்து வீரரை இனங் காணல் 09



கணினி யானை 11



கூடங்குளத்தில் மீண்டும் பதற்றம் 17



# கோப்பாயில் படையினருக்கு காணி; கூட்டத்தில் முடிவெடுக்கப்படவில்லை

## ஊடகச்செய்திகள் குறித்து உதயன் எம்.பி. விளக்கம்



(நமது நிருபர்)

கோப்பாய் பிரதேசத்தில் படையினரது முகாம்களை அமைப்பதற்காகக் கோரப்பட்ட காணிகளை வழங்குவது என, வலிகாமம் கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேசத்தில் படை முகாம்களை அமைப்பதற்கான காணிகளை வழங்குமாறு படையினர் விடுத்திருக்கும் கோரிக்கை தொடர்பாக இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர் அறியத்தந்தார் எனவும், எனினும் இந்த விடயம் குறித்த இறுதி முடிவு எதுவும் அந்தக் கூட்டத்தில் எட்டப்படவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், கோப்பாயில் 550 பரப்புக் காணி படையினரிடம் பறிபோகிறது என்வும், இதற்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகவும், அங்கே 4 நிரந்தரப் படை முகாம்கள் அமைக்கப்படவிருப்பதாகவும்.

19 ஆம் பக்கம் பார்க்க

# வறிய குடும்பங்களுக்கு அரச காணி பகிர்ந்தளிப்பு

(கோப்பாய்)

கோப்பாயில் காணிகள் எதுவுமற்ற குடும்பங்களுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. கடந்த வியாழக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இவ்வாறான காணி எதுவுமற்ற 286 குடும்பங்களுக்கும் காணி உரிமைப் பத்திரம் வழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதையடுத்து விரைவில் அவர்களுக்குரிய காணி உரிமப்பத்திரம் வழங்குவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜே/275 கிராம அலுவலர் பிரிவில் 30 குடும்பங்களுக்கும், ஜே/273 கிராம அலுவலர் பிரிவில் 24 குடும்பங்களும், ஜே/267 கிராம அலுவலர் பிரிவில் 40 குடும்பங்களும், ஜே/272 கிராம அலுவலர் பிரிவில் 11 குடும்பங்களும், ஜே/287 கிராம அலுவலர் பிரிவில் 148 குடும்பங்களும் ஜே/265 கிராம அலுவலர் பிரிவில் 33 குடும்பங்களும்


19 ஆம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சியில் பொறியியல் பீடம்

## துரிதகதியில் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் உடனடியாக அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.



கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் அமைந்துள்ள பகுதிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் விவசாய மற்றும் பொறியியல் பீடங்களை உடனடியாக ஆரம்பிப்பதிலுள்ள இடர்பாடுகள் பிரச்சினைகள் தொடர்பாகத் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

இதன் பிரகாரம் கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற இது போன்றதொரு கலந்துரையாடலின் போது விவசாய பீடத்தின் விரிவுரைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் அங்கு குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளுமுகமாகவும், வளாகத்தின் ஏனைய வேலைத்திட்டங்களுக்காகவும் அரச அதிபர் ஊடாக இரண்டு உழவு இயந்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படுமென உறுதிமொழி

19 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கைப் பயணிகளின் பாதுகாப்பை தமிழக அரசு உறுதிசெய்ய வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

(கொழும்பு)

இந்தியாவிற்கு வருகைதருகின்ற இலங்கையைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் அங்கு வசித்துவருகின்ற இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தமிழ்நாட்டு அரசாங்கத்திடம் சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவிற்கு வருகைதருகின்ற இலங்கையைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் அங்கு வசித்துவருகின்ற இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையை தமிழ்நாட்டிலுள்ள அதிகாரிகள் உடனடியாக எடுக்க வேண்டும். ஏற்கனவே இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் உடனடியாக விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் நியாயமான விசாரணையை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை தமிழக அரசு எடுக்க வேண்டுமெனவும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியப் பிரிவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜி.ஆனந்தபத்மநாபன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இலங்கையிலிருந்து தமிழகத்திற்குச் சென்ற ஒரு பாடசாலைக் குழு உட்பட 2 கால்பந்தாட்டக் குழுக்களை திருப்பியனுப்புமாறு தமிழ்நாட்டு மாநில அரசாங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டிருந்தது. போட்டியில்

19 ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதி தலைமையில் அபிவிருத்திக் குழுக் கூட்டம்

## கிளிநொச்சி வருகிறார் மகிந்த

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதற்காக எதிர்வரும் 25 ஆம் திகதி ஜனாதிபதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் அவர் புதிதாக கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட பொது சந்தைக்கட்டடத்தினை திறந்து வைக்கவுள்ளதோடு கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட மின்நிலையத்தினையும் திறந்து வைப்பதோடு அம் மின் நிலையம் தேசிய மின்கட்டமைப்புடன் அன்றையதினம் இணைக்கப்படவுள்ளது. மேலும் கிளிநொச்சி

19 ஆம் பக்கம் பார்க்க

# கிழக்கில் இன்று தேர்தல் முறைகேடுகள் நடக்காது

## தேர்தல் ஆணையாளர் உறுதி

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் வாக்களிப்பின்போதும் வாக்குகள் எண்ணப்படும் போதும் முறைகேடுகள் முடிந்த வரை இடம்பெற வாய்ப்பே இருக்காது. அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் நாட்டின் நீதித்துறையை நாடி நீதியைப் பெற்றுக்கொள்ளும் சுதந்திரம் ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு என்று தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனுக்கு தொலைநகல் மூலம் அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெறலாம் என்று அச்சம் தெரிவித்தும் ஆகவே நீதியாகவும் சுயாதீனமானதுமான தேர்தலை

19 ஆம் பக்கம் பார்க்க

# தாதியர் விடுதி இடமாற்றம் தாக்குதல் சம்பவத்தின் எதிரொலி



(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தியில் தனியார் வீடு ஒன்றில் இயங்கிவரும் யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகஸ்தர் விடுதியில் தங்கியிருந்த தாதிய உத்தியோகத்தர்கள் யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் இயங்கும் விடுதிக்குத் தற்காலிகமாக மாற்றப்படவுள்ளனர். நேற்று அதிகாலை 1.00 மணிக்கு குறித்த விடுதியினுள் புகுந்த இனந்தெரியாத நபர் அந்த விடுதியில் தங்கியிருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தி அவரைக் காயபபடுத்தியிருந்த சம்பவத்தை அடுத்தே அந்த விடுதியில் தங்கியிருந்த தாதியர்கள் வைத்தியசாலை வளாகத்தில் உள்ள விடுதிக்குத் தற்காலிகமாக வைத்தியசாலை நிர்வாகத்தினால் மாற்றப்படவுள்ளனர். யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் இடப்பற்றாக்குறை காரணமாக ஆனைப்பந்திப் பகுதியில் தனியார் வீடு ஒன்றினை வாடகைக்கு அமர்த்தி அதில் வைத்தியசாலை தாதியர் விடுதி செயற்பட்டுவந்தது. இதில் சுமார் 20 முதல் 25 வரையான தாதியர்கள் தங்கியிருந்து வந்தமையும் அவர்களில் பெரும்பா ன்மை இனத்தவர்கள் அதிகமாக உள்ளடங்கியிருந்ததும இங்கு குறிப்பிடத்தக்கது. (பா,இ)

## நாளை இரத்ததானம் செய்யலாம்

கோண்டாவில் பொது அமைப்புக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான முகாம நாளை (09.09.2012) காலை 9.00 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. வருடா வருடம் இடம்பெறும் இவ் உயிர் காக்கும் உன்னதமான பணியில் இணைந்து இரத்தம் தானமாகக் கொடுக்க விரும்புவபர்கள் இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக கொள்கின்றனர்.

# பரதநாட்டிய அரங்கேற்றம்

யாழ். இளவாலை திருமறைக் கலாமன்ற மாணவியும் நாட்டிய கலாவித்தகர் நுண்கலைமாணி ஸ்ரீமதி சுதர்சினி கரணசனின் மாணவியுமாகிய செல்வி டெல்சியா அந்தோனிப்பிள்ளையின் பரத நாட்டிய அரங்கேற்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். திருமறைக் கலா மன்றத்தின் இயக்குநர் அருட் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், யாழ். பல்கலைக் கழகத்தின் நடனத்துறைத் தலைவர் திருமதி சீதாலக்ஷ்மி பிரபாகரன், யாழ். இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலயத்தின் பிரதி அதிபர் சத்தியவாணி நாகேஸ்வரன் கிறிஸ்ரி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் அரங்கேற்ற நிகழ்வுக்கு அணிசெய் கலைஞர்களாக தவநாதன் றொபேட் (பாட்டு), சி.துரைராஜா (மிருதங்கம்), அ.ஜெயராமன் (வயலின்) ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (52)

# கல்வியங்காட்டில் திருடர் தொல்லை

கல்வியங்காட்டுப் பகுதியில் பட்டப்பகலில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில உள்ள வீடு ஒன்றில் கணவனும் மனைவியும் வேலைக்குச் சென்றிருந்த சமயம் வீட்டில் எவரும் இல்லாத நேரமாகப் பார்த்து திருடன் தனது கைவரிசையைக் காட்டியுள்ளான்.

முன்பக்கக் கதவை உடைத்துத் திறந்து வீட்டிற்குள் நுழைந்த திருடன் அங்கிருந்த சுமார் இருபதினாயிரம் ரூபா பணத்தைத திருடிச் சென்றுள்ளான். அலுமாரி ஒன்றைத் திறப்பதற்காக அவன் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. சுவாமி அறைக்கதவு திறக்கப்படாமல் இருந்தது. இடையில் வீட்டுக்கு வந்த வீட்டுக்காரரைக் கண்டதும் கள்வன் பக்கத்து வீட்டு மதிலால் ஏறித் தப்பியுள்ள போதிலும் அவனைப் பிடிக்க முடியவில்லை.

இக் களவு பற்றிக் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணையை மேற்கொண்டதுடன் கை அடையாளங்களையும் பதிவு செய்தனர். சில தினங்களுக்கு முன்னர் கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள மற்றொரு வீட்டில் பட்டப்பகலில் திருடன் வீட்டின் கூரை ஓடுகளைப் பிரித்து வீட்டிற்குள் நுழைந்து வீடு முழுவ்தும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தியிருந்தான். (137)

# பாடசாலை சேவைக்கு அதிக பஸ்வண்டிகள்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண ஊழியர்களுக்குரிய சம்பளம் மற்றும் நிலுவையாக இருந்த பாக்கிப் பணம் முழுவதும் வழங்கப்பட்டு விட்டதாக இ.பொ.ச. வடமாகாணப் பிரதான பிராந்திய முகாமையாளர் எஸ்.அஸ்கர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் 8 ஆம் திகதி இவர்களுக்கான கொடுப்பனவுகள் சபையினால் வழங்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணம் சாலையில் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட பஸ்களில் 23 பஸ்கள் திருத்தம் செய்யப்பட்டு யாழ். மாவட்டத்தின் பல வீதிகளிலும் சேவைக்கு விடப்பட்டுள்ளன. பாடசாலை நாட்களில் பாடசாலை சேவைக்கென 28 பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

இலங்கையில் பாடசாலை சேவைக்கென அதிகூடிய பஸ்கள் சேவைக்கு விடப்பட்டுள்ளமை யாழ்ப்பாணத்திலேயே காணப்படுகின்றது என அவர் மேலும் கூறினார்.

இன்னும் ஒருமாத காலத்தில் நான்கு குளிரூட்டப்பட்ட பேருந்துகள் வரவுள்ளன. பருத்தித்துறை சாலைக்கு இரண்டும் யாழ்ப்பாணத்திற்கு இரண்டுமாக வரவுள்ள இந்த பஸ்கள் யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடவுள்ளன என முகாமையாளர் தெரிவித்தார். (137)

# கும்பாபிஷேகம்

தென்புலோலி புற்றளை பெரியவளவு வீரபத்திரர் ஆலய கும்பாபிஷேக தின திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அன்றையதினம் காலை வீரபத்திரப் பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளது.



வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் வடமாகாண விவசாய அமைச்சின் ஒழுங்கு செய்யப்பட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் தேசிய அபிவிருத்தித் திட்டத்திற்கான விவசாய இயந்திர உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு கிளி. விவசாயப் பணிப்பாளர் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. வடமாகாணப் பிரதம செயலாளர் ஆர்.வியலட்சுமி பிரிகேடியரை கொஸ்தாவிடம் உபகரணங்களைக் கையளிப்பதையும், அருகில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், விவசாய அமைச்சின் செயலாளர் மு.காவலல்டின் நிற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (படம் - நந்தகுமார்)



இல. 179, 181 சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள தங்குவிடுதியுடன் கூடிய சிற்றுண்டிச்சாலையை Goldan Holiday Guest Rest (pvt) Ltd நேற்று ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

# விதிமுறைகளை மீறினால் எரிபொருள் மானியம் இல்லை

(யாழ்ப்பாணம்)

"றோலர்" மீன்பிடி மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களின் படகுகளுக்கான எரிபொருள் மானியம் நிறுத்தப்படவுள்ளதாக கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத் தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இவ்வாறான தொழில் நடவடிக்கை கடற்றொழில் நீரியல்வள அமைச்சினால் தடை செய்யப்பட்டிருக்கின்றது. இருந்தும் வடபகுதி மீனவர்கள் இத்தகைய தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகத் தமக்குத் தகவல் கிடைத்துவருவதாகத் தெரிவித்த கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களகம் இவ்வாறு சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளர்களது கடற்கலங்களுக்கான எரிபொருள் மானியம் நிறுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தந்த மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. இதே வேளை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினால் 2000 கடற்றொழிலாளர் கடற்கலங்களுக்கு எரிபொருள மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த தொகை மேலும் அதிகரிக்கும் என்றும் தெரிவித்த யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரி மேலும எரிபொருள் மானியம் பெறும் கடற்கலங்களுக்கான அனுமதி கடற்றொழில் அமைச்சிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபடும் படகுகளும் இனங்காணப்பட்டு அவற்றுக்கான எரிபொருள் விநியோகம் நிறுத்தப்படவுள்ளதாகவும் மேலும் அவ் அதிகாரி குறிப்பிட்டார். யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பல படகுகள் இவ்வாறான நடவடிக்கையின் நிமிர்த்தம் வேறு பகுதிகளுக்குச் சென்றிருப்பதாகவும் மேலும் தெரியவந்தது. (பா)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

நல்ல சுற்றாடலில் உள்ள ஒரு பரப்புக் காணியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட ஒரு வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.சீவறட்ணம், றியிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (R/154)

# சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க அதிக அக்கறை அவசியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சிறுவர் விடயங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் என்றுமில்லாதவாறு சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகிறது. இதனால் சிறுவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். அத்துடன் உடல் உள ரீதியான மனத்தாக்கங்களுக்கும் ஆளாகின்றனர்.

இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு சிறுவர் விடயங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அசமந்தப் போக்குடன் செயற்பட்டு வருவதாலேயே சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரிக்கக் காரணமாக அமைகின்றன.

இம்மாவட்டத்தில் தற்போது [illegible]வர்கள் பாலியல் ரீதியாகத் துனபுறுத்தப்படுவதுடன், வேலைக்கு அமர்த்துதல் மற்றும் உறவினர்களால் சரியான முறையில் பராமரிக்கப்படாமல் தீய வழிகளில் செல்லுதல் போன்ற விடயங்களால் சிறுவர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இதைவிட சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபடும் நபர்கள் பொலிஸாரால் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுகின்ற போதிலும் அந்நபர் வெளியே வந்து பல்வேறு துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது.

அண்மையில் கண்டாவளைப் பிரதேசத்தில் சிறுவன் காணாமல் போன சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. இவ்வாறு சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதற்கு சரியான விழிப்புணர்வுகள் இன்மையும் காரணமாக அமைகிறது.

சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாது ஒழிப்பதற்கு கிராம மட்டத்திலிருந்தே விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். சிறுவர் விடயங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் சிறுவர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அரச அரசசார்பற்ற நிறுவனங்களும் முழுமையாகச் செயற்பட்டால் இவற்றை முழுமையாகக் கட்டுபபடுத்துவதற்கு இலகுவாக அமையும். அந்த வகையில் இந்நிறுவனங்கள் செயல் வடிவில் இவற்றைச் செய்ய வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (கே)

## பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பாரதிவிழாவையொட்டி மாணவ அங்கத்தவரிடையே இடம்பெறும் பேச்சுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுளளது.

போட்டிகளில் பங்குகொள்வதற்காக விண்ணப்பித்த அங்கத்தவர்களை உரிய நேரத்திற்குச் சமுகமளிக்குமாறு போட்டி இணைபபாளர் கேட்டுக்கொண்டுள்ளார்..

## வல்லிபுர ஆழ்வார் உற்சவத்தில் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு

(பருத்தித்துறை)

வடமராட்சியில் வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவ காலங்களில் பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

உற்சவ காலங்களின்போது பொலிஸ் பாதுகாப்பு, குடிநீர் விநியோகம், சுகாதாரம் ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்கள் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆகியோரை அழைத்து வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்துரையாடினர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உற்சவம் நடைபெறவுள்ள நிலையில் ஆலய சூழலில் பொலிஸ் நிலையம், சாரணர் பகுதி, பொதுச் சுகாதார பரிசோதகர் பகுதி ஆகியவற்றுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இறுதி மூன்று திருவிழாக்களான சப்பரம், தேர், தீர்த்தம் ஆகிய நாட்களில் மேலதிக பாதுகாப்புக்காக பொலிஸார் பல இடங்களிலிருந்தும் கடமைக்காக அழைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவித்தார்.

அண்மையில் செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுத்த பொலிஸாரின் கடமைக்கு பிரதேச செயலர் நன்றிகளைத் தெரிவித்ததுடன் இச்சேவையை இவ்வாலய உற்சவத்திலும் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (109)

## பாலியாற்றில் பாலம் அமைக்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

மல்லாவிப் பிரதேசத்தின் பாலியாற்றுப் பகுதியில் பாலம் ஒன்று அமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

சுமார் 8 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பாலம் அமைககப்படவுள்ளதுடன் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம 20 ஆம் திகதி இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றன. இதில் முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர் நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மல்லாவியிலிருந்து பாலியாறு ஊடாக நட்டாங்கண்டல் செல்லும் மக்கள் இந்தப் பாலம் ஊடாகப் பயணம் செய்வதில் கடந்த பல வருடங்களாக சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

தற்போது பாலம் புனரமைக்கப்பட்ட பின்னர் நட்டாங்கண்டல் பகுதியிலிருந்து மல்லாவி வருவதற்குப் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை மல்லாவிப் பகுதியிலிருந்து மாங்குளம் பகுதிக்குக் கொண்டு சென்று சந்தைப்படுத்த இலகுவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (143)

## பொருட்கள் விற்பனை

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்கு பல நோ.கூ.சங்கம் கொடிகாமம் பணிமனையில் பயன்படுத்தப்[illegible] பழைய எரிபொருள் தாங்கி[illegible], மின் பிறப்பாக்கிகள், மில் உபகரணங்கள் விற்பனை செய்யப்படவுள்ளது.

இதனைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பு கொடிகாமம் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (150)

## தம்பான் வளர்ச்சிக் கழகம் மீண்டும் இயங்க வேண்டும்

(கிளிநொச்சி)

வடவரணி தம்பான் தறகாப்பு வளர்ச்சிக் கழகம் கடந்த கால இடப்பெயர்வு காரணமாக இயங்காமல் இடையில் நிறுத்தபபட்டு இருந்தது.

இக்கழகத்தில் பல அங்கத்தவர்கள் உள்ளனர். சிலர் கடனடிப்படையில் கடன் எடுத்தும் சிலர் கழகத்தில் சேமிப்புப் பணமாக வைப்பிலிட்டும் உள்ளனர்.

தற்போது இக்கழகம் இயங்காததால் பணத்தை வைப்பிலிட்ட பயனாளிகள் மிகுந்த ஏமாற்றமடைந்த நிலையில் உள்ளனர்.

எனவே தற்போதைய சமாதான சூழலில் இக்கழகத்தை உரியவர்கள் மீண்டும் இயங்க வைத்து சேமிப்பில் பண வைப்புச்செய்தவர்களின் பணத்தை வழங்க முன்வரவேண்டும் எனப் பயனாளிகள் எதிர்பார்க்கின்றனர். (150)

## தமிழ் இலக்கிய விழா

(கிளிநொச்சி)

ஒவ்வொருவருடமும் வட மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வரும் வட மாகாண தமிழ் இலக்கிய விழா இம்முறை யாழ். மாவட்டத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் நடத்தப்பட்ட நிலையில், இவ்வருடத்திற்கான விழாவானது வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் ஏதாவதொரு மாவட்டத்தில் நடத்தப்படவேண்டுமென கோரிக்கைகள் முன்னெழுகின்றன.

2004 ஆம் ஆண்டு வவுனியாவல் நடத்தப்பட்ட பின்னர் இன்று வரை வவுனியாவில் நடத்தப்படவில்லை. (142)



கிளிநொச்சி நகரப் பகுதியில் வீதி அகலிப்பு பணிகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் வடிகால்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (படம்: ஜெ.கலையகன்)

## மோட்டர் பழுதடைந்ததால் நீரைப்பெற நோயாளர்கள் அவதி

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டையிலுள்ள மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின் நீர் வழங்கும் பம்பி (மோட்டர்) பழுதடைந்து கடந்த 10 நாட்களுக்கு மேலாகியும் அதனைத் திருத்தி அமைக்காததால் வைத்தியசாலை ஊழியர்களும் நோயாளர்களும் பெரும் கஷ்ட நிலையை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு பொருத்தப்பட்டிருந்த மோட்டர் பழுதடைந்துள்ளது என்றும் இதனைத் திருத்தித் தருமாறு யாழ் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி அறிவித்திருந்தார்.

இந்த அறிவித்தலைத் தொடர்ந்து அவர்களால் உடனடியாக திருத்துவதற்காக மோட்டர் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டும் இதுவரை அது திருத்தப்பட்டு திருப்பிக் கொடுக்கப்படவில்லை. இதனால் வைத்தியசாலையின் ஊழியர்கள், நோயாளர்கள் மற்றும் பலர் தண்ணீரைப் பெறுவதற்கு பெரும் அவலத்துக்குள்ளாகியுள்ளனர்.

வைத்தியசாலை ஊழியர்கள் கைவாளியால் தண்ணீரை அள்ளித் தமது தேவைகளை ஓரளவுக்கு பூர்த்தி செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இங்கு பிரசவ விடுதியொன்றும் அமைந்துள்ளதால் இதற்குத் தேவையான தண்ணீரும் இன்மையால் பெரும் கஷ்ட நிலைக்கு ஆளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (104)

## சட்ட ஆவணங்களை வழங்கும் நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தும் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 11, 13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறி வசித்து வரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுதந்திரபுரம், தேவிபுரம், உடையார்கட்டு வடக்கு, தெற்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9 மணி முதல் 4 மணிவரை வள்ளிபுனம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஆனந்தபுரம் மல்லிகைத்தீவு, மந்துவில், புதுக்குடியிருப்பு கிழக்கு, மேற்கு சிவநகர், இரணைப்பாலை, கோம்பாவில், மன்னாகண்டல் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் முதியோர் அடையாள அட்டை, பிறப்பு இறப்பு திருமணப் பதிவுகளுக்குரிய சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை உள்ள உட்பட ஆவணங்கள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. (04)

முதல் குற்றத்தை சரி என்று சாதிப்பவன் இரண்டாவது குற்றத்தையும் செய்தவனாகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## இன்று மற்றுமொரு தேர்தல்!

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தனின் கட்சியும், மற்றும் அதாவுல்லா, ஹிஸ்புல்லா ஆகியோரின் முஸ்லிம் கட்சிகளும் இணைந்து போட்டியிடுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜேவிபி ஆகியனவும் தனித்தனியாகப் போட்டியிடுகின்றன.

மூவின மக்களும் ஏறத்தாழச் சமஅளவில் வாழ்கின்ற மாகாணம் என்பதால் எந்தெந்தக் கட்சிகளுக்கு என்னென்ன அளவில் மக்கள் ஆதரவு இருக்கிறது என்பது தேர்தல் முடிவுகளில் தெரிந்துவிடும் என நம்பலாம். 1989 ஆம் ஆண்டுக்குப் பிறகு கிழக்கில் நடைபெறும் தேர்தல் பிரச்சார பரப்புரைகளில் தமிழ், முஸ்லிம் இனவாதம் பெருமளவுக்கு எடுத்து வீசப்படுவதை அவதானிக்கிறோம்.

இம்முறையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்துத் தமிழ் மக்களையும் வாக்களிக்க வரச்செய்வதற்கும், பெருமளவு வாக்குகளைத் தாங்கள் பெறுவதற்குமாக இனரோசத்தைக் கிளறும் பேச்சுக்களையே பயன்படுத்தியிருக்கிறது. பதிலுக்கு முஸ்லிம் காங்கிரசும் அனைத்து முஸ்லிம் வாக்குகளையும் கவர்ந்து விடும் நோக்கில் இனரீதியாகப் பிளவுபடுத்தும் பேச்சுக்களை வாரியிறைத்திருக்கிறது.

கிழக்கில் சமூக அபிவிருத்திக்கு முஸ்லிம் முதலமைச்சரின் தேவையை வலியுறுத்தி, அதற்குப் பேரம் பேசத் தகுந்த ஆதரவை முஸ்லிம் வாக்காளர்கள் வழங்க வேண்டுமெனக் கேட்டிருக்கிறது காங்கிரஸ். சர்வதேசத்திற்குத் தமிழ் மக்களின் ஒற்றுமையைக் காட்டி, இலங்கையரசின் மீது போர்க்குற்ற விசாரணையைக் கொண்டுவர முடியும் என்றும், தமிழ் மக்களுக்காகச் சர்வதேசத்தைச் செயற்படவைக்கும் இந்த வெற்றி கிழக்கு மக்களின் ஏகோபித்த வாக்குகளிலேயே தங்கியுள்ளது என்றும் கேட்டிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

கிழக்கு மக்கள் நாட்டின் ஏனைய மக்களைப் போல முன்னேறவும் அபிவிருத்தியடையவும், அமைதியான வாழ்விற்கும் இங்குள்ள மூன்று தேசியங்களும் இணக்கமாக நடந்துகொள்ளும் சூழலிலேயே சாத்தியம். தேசியங்களிடையே பகையை மூட்டி இந்த மக்களை மேலும் வதைகளுக்குள் வைத்திருக்க விரும்பும் அரசியலுக்குத் துணைபோய்விட வேண்டாம் என்று முன்னாள் முதல்வர் சந்திரகாந்தன் தனது பிரசாரவுரைகளில் கேட்டுக்கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இறுதிப் பிரச்சார உரைகளில் இந்தத் தேர்தலில் கிழக்கு மக்கள் அளிக்கப்போகும் வாக்குகளிலேயே தமிழினத்தின் வெற்றி தங்கியிருப்பதாகச் சொல்லுமளவிற்குப் போய்விட்டார்கள். தேர்தல் முடிந்த பிறகு தமிழினத்தின் வெற்றி எவ்வளவு தூரத்திலிருக்கிறது என்று தமிழ்மக்கள் கேட்கமாட்டார்கள் என்பதில் அவர்களுக்கு அபார நம்பிக்கை.

தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்பதே முள்ளிவாய்க்காலில் தங்கள் உயிரை ஈகம் செய்த உறவுகளுக்குச் செலுத்தும் நன்றிக்கடனாகும் என்றும் வாய்கூசாமல் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்த் தேசியத்தைப் பேச்சளவில் முழங்கிவிட்டால், உணர்ச்சிகரமாக எதைச்சொல்லியும் பேய்க்காட்டலாம் என்று நம்புகிறார்கள். முள்ளிவாய்க்காலில் உறவுகள் உயிரை ஈகம் செய்தபோது, அவர்களது கதறல்களைக் காதில் வாங்காமல் இவர்களெல்லாம் எங்கெங்கு ஓடிப்போய் ஒளிந்து கொண்டார்கள் என்பதை அதற்குள்ளாகவா எல்லா மக்களும் மறந்திருப்பர்!

பிணங்களை வைத்தும் அரசியல் லாபம் தேட ஓடும் இவர்களது நெடிய வரலாறு கிழக்கு மக்களுக்குத் தெரியாமலா இருக்கும்? இவர்களது ரோச அரசியல் ஆட்டத்திற்கு எத்தனை ஆயிரம் பிள்ளைகளைப் பறிகொடுத்தவர்கள் அவர்கள்!

- ஆசிரியர்

# யுத்தப் பாதிப்புக்கள் தாராளம் தடைகளற்ற பொருளாதார வளர்ச்சி

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட போதிலும் நாட்டில் 8.2 வீதபொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. யுத்தத்தில் நேரடியாக பாதிக்கப்பட்ட வடக்கில் 2.2 வீத பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவிற்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அந்நாட்டு அரசியல்வாதி களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன் போது அவர் தெரிவித்துள்ளதாவது,

தோல்வியை தாங்கிக் கொள்ள முடியாத புலம் பெயர் தமிழர்களில் ஒரு சாரார் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர்.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி நிலைமைகள் குறித்து பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் பார்வையிட முடியும். அவர்களை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

சில தரப்பினர் போலியான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை தொடர்பான குற்றச்சாட்டுக்களின் போது பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடு நிலையான தீர்மானங்களை எடுக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# சாவகச்சேரி இலங்கை வங்கி நெற்செய்கையாளருக்கு கடனுதவி

(தென்மராட்சி)

சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளை இவ்வருடமும் விவசாய சம்மேளனங்களின் ஊடாக நெற் செய்கையாளர்களுக்கு ஆறு மாதகால தவணை கடனுதவிகளை வழங்க முன் வந்துள்ளது.

இதனடிப்படையில் இம் மாதம் கடனுதவிக்கான விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன. கல்வயல் விவசாய சம்மேளனத்தின் பயனாளிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் இக் கடனுதவி மூலம் பயன் பெறவுள்ளனர். அண்மையில் இதற்கான விண்ணப்பங்கள் கல்வயல் பொது நோக்கு மண்டபத்தில் வங்கி ஊழியர்களால் வழங்கப்பட்டன.

விண்ணப்பங்களை பயனாளிகள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவேண்டும். இதன்போது தேசிய அடையாள அட்டை, வங்கி கணக்குப் புத்தகம் என்பன கொண்டுவர வேண்டும் என்றும் கல்வயல் விவசாய சம்மேளனத்தின் செயலாளர் கா.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இவ்வருடம் நெற்செய்கையினை ஊக்கப்படுத்தும் நோக்குடன் பயனாளிகளுக்கு மூன்று இலட்சம் ரூபா வரையிலான கடனுதவியினை இலங்கை வங்கிக் கிளை வழங்க முன்வந்திருப்பதாக வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார். இக்கடனுதவி பெறும் பயனாளிகள் தமது கணக்கில் சிறு தொகையை சேமிப்பதன் மூலம் காப்புறுதித் திட்டம் ஒன்றினையும் பெற்றுக் கொள்ள முடியும். இக்காப்புறுதித் திட்டத்தின் மூலம் சேமிக்கும் பணத்தின் 10 மடங்கு வரையான இழப்பீட்டு தொகையினை பெற்றுக்கொள்ள முடியும் என்று வங்கியின் முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

## "ஈழத்து குறும்பட விழா"

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் ஈழத்து குறும்பட விழா ஒன்றை செப்ரெம்பர் மாத இறுதியில் நடத்தத் தீர்மானித்துள்ளது. இதில் 2010ஆம் ஆண்டிற்குப் பின் ஈழத்தில் தயாரிக்கப்பட்ட தமிழ் குறும்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இந்தத் திரைப்பட விழா இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது. காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ள இந்த விழாவில், குறும்படங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள், கருத்துப்பகிர்வுகள், குறும்படங்கள் திரையிடல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொண்டு, இலக்கம் 021 222 9873 மூலம் பதிவுகளை மேற்கொள்ளலாம் என மையத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# ஏ-9 வீதியில் துர்நாற்றம்; நடவடிக்கை எடுப்பது யார்?

நாவற்குழி ஏ-9 வீதியில் அண்மையில் வாகனத்தால் மோதுண்டு இறந்து கிடக்கும் நாயின் உடற்பாகங்களைக் காகங்கள் கொத்திக் குதறுவதோடு, அதனிலிருந்து துர்நாற்றம் எழுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

நாவற்குழி அரச களஞ்சியக் கட்டடத்திற்கு முன்பாக நாய் இறந்து கிடப்பதோடு, வீதியால் பயணிக்கும் பொது மக்கள் இறந்து நாயிலிருந்து எழும் துர்நாற்றத்தைச் சகிக்க முடியாது அசௌகரியப்படுச் செல்வதோடு விபத்துக்களுக்கும் ஆளாக நேரிடுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட பகுதிக்குப் பொறுப்பான பிரதேச சபை இவ்விடயத்தில் கவனம் எடுத்து, மக்களுக்கு ஏற்படும் அசௌகரியத்தை நீக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதேவேளை, குறிப்பிட்ட அரசகளஞ்சியத்துக்கு முன்பாக தேங்கி நிற்கும் நீர் மாசடைந்து அந்நீரும் துர்நாற்றம் வீசுவதை அவதானிக்க முடிகிறது. (138)

# கல்வயல் விவசாயிகள் உரமானியத்திற்கு விண்ணப்பிக்கலாம்

(தென்மராட்சி)

கல்வயல் விவசாய சம்மேளனம் மானிய உர விநியோகத்திற்கான விண்ணப்பங்களை வழங்கி வருகின்றது.

இவ்வருட கால போக நெற்செய்கைக்கான மானிய உரம் பெறும் பயனாளிகள் இவ்வருட சந்தாப்பணத்தினைச் செலுத்தி, விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து வழங்கவேண்டும்.

கட்டம் கட்டமாக வழங்கப்படுகின்ற மானிய உரம், முதற்கட்டமாக இம்மாத இறுதியில் வழங்கப்படும். இந்த சம்மேளனத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள் அனைவரும் வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வழங்குமாறு சம்மேளனத்தின் செயலாளர் கா.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

# பாதிக்கப்பட்ட சமூகத்தைக் கட்டியெழுப்ப 76 பயனாளிகளுக்கு சுயதொழில் கடன்

(வவுனியா)

சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட சமூகத்தை மீளக்கட்டியெழுப்பும் செயற்திட்டத்தின் கீழ் 76 பயனாளிகளுக்கு சுயதொழில் கடன் வழங்கப்பட்டுள்ளன என வவுனியா மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் செ.சிறினிவாசன் தெரிவித்தார்.

வெண்கலச்செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் சூடுவெந்தபுலவு கிராம அலுவலர் பிரிவில் பயனாளிகள் ஒருவருக்கு நேற்று முன்தினம் சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் கையளிக்கும் முன்றம் கட்டவைபவம் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இத்திட்டத்தின் ஊடாக எதிர்வரும் காலத்தில் 33 பயனாளிகள் நன்மை பெறவுள்ளதுடன், ஏற்கனவே சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்ட 76 பயனாளிகளும் பயனடைந்து வருவதாகவும் இத்திட்டமானது முரண்பாடுகளால் பாதிப்படைந்த பல்வேறு தரப்பினரையும் பொருளாதார ரீதியில் மேம்படவைக்க உதவுவதுடன் வறுமையை ஒழிக்கும் செயற்பாட்டின் ஒரு கட்டம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் ந.கமலதாசன், சமூகசேவை உத்தியோகத்தர் செ.சிறினிவாசன், சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் வவுனியா மாவட்ட திட்ட இணைப்பாளர் எ.கில்பேர்ட் அருள்தாஸ், வவுனியா பொஸ்டோ நிறுவன திட்ட முகாமையாளர் பா.செந்தில்குமரன் வெளிக்கள உத்தியோகத்தர் சி.ஒஸ்ரின், கிராம உத்தியோகத்தர் பரராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாடசாலைக் கல்வியில் தொடர்பாடல் ஊடகக்கற்கைநெறி ஒரு நோக்கு

**திருமதி. சுதாஜினி றுஷாங்கன்**
ஆசிரியர் - தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
உடுவில் மகளிர் கல்லூரி

இன்றைய சமூகத்தின் அடிப்படைத் தேவைகளிலொன்றாக தொடர்பாடலுக்கான தேவையும் வளர்ந்துள்ளது. மனித சமூகத்தின் தோற்றம் முதல் அதன் வளர்ச்சிக் காலகட்டங்கள் அனைத்துடனும் தொடர்பாடலும் இணைந்தே வளர்ந்துள்ளது.

தகவல்களை மக்களிடையே பரவலடையச் செய்யும்பொருட்டு தொடர்பு ஊடகங்கள் தோற்றம் பெற்றன. ஆனால், அவை பல்வேறு செல்வாக்குகளுக்கும், அழுத்தங்களுக்கும் உட்பட்டிருப்பதனால் மக்களுக்குச் சரியான ஊடகத் தகவல்கள் கிடைப்பதில்லை. அவற்றை நுகரும் மக்கள் சரியான தகவல்களைக் கொண்டு தாமாக தமக்கென்று சுயமான சிந்தனையை வளர்த்துக்கொள்வதற்கு இடமளிக்கப்படுவதில்லை.

இது எமது பிரதேசம், நாடு மாத்திரமல்ல, உலகளாவிய ரீதியில் உள்ள பிரச்சினை. ஆனால், சில பிராந்திய ஊடகங்களில் இவ்வாறான நிலைமை அளவுக்கு அதிகமாக சில அரசியல் தேவையின் பொருட்டு உருவாக்கப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

**மக்கள் வெறுமனே ஒரு நுகர்வுச் சமூகமாக, தருபவையெல்லாவற்றையும் அப்படியே உள்வாங்கிக் கொள்ளுவதும், பின்னர் அதனையொட்டிய சிந்தனை, செயற்பாடுகளில் ஈடுபடுவதுமாகத் தம்மை வடிவமைத்துக் கொள்ளாது, ஊடகங்களை சரியாகப் புரிந்து கொள்வதும், அவற்றைப் பகுப்பாய்வு செய்வதும், கணிப்பிடுதலும் அவசியமாகும். இத்தகைய தகைமை சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் அவசியமாயுள்ளது.**

தேசிய ஊடகங்கள் எனின் அவை அரசியல், வர்த்தக சமூகத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பதை அவதானிக்கலாம். பிறதேசத்து ஊடகம் எனின் அவை அந்தந்த நாட்டின் அரசியல், பொருளாதார, பண்பாட்டினைக் கொண்டுள்ளதாகவும், பொதுவான உலகளாவிய ஊடகப்போக்கை (Global media trend) கொண்டிருப்பதையும் காணலாம்.

இவ்வாறான நிலைமையில் மக்கள் வெறுமனே ஒரு நுகர்வுச் சமூகமாக, தருபவையெல்லாவற்றையும் அப்படியே உள்வாங்கிக் கொள்ளுவதும், பின்னர் அதனையொட்டிய சிந்தனை, செயற்பாடுகளில் ஈடுபடுவதுமாகத் தம்மை வடிவமைத்துக்கொள்ளாது, ஊடகங்களை சரியாகப் புரிந்துகொள்வதும், அவற்றைப் பகுப்பாய்வு செய்வதும், கணிப்பிடுதலும் அவசியமாகும். இத்தகைய தகைமை சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் அவசியமாயுள்ளது.

இத்தகைய தகைமையைப் பெற்றுக்கொள்ளுதலையே ஊடக எழுத்தறிவு அல்லது ஊடக அறிவு எனப்படுகிறது (Media literacy).

**க.பொ.த. சாதாரண தரத்தில்**

இதன் பிரகாரமே உலகம் முழுவதும் ஊடகக் கல்வியை பிரபல்யப்படுத்தும் திட்டமொன்றை யுனெஸ்கோ அமைப்பானது அறிமுகப்படுத்தியது. இதன் விளைவாக 2006ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பாடசாலைக் கல்வியில் தரம் 10 இலிருந்து தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் என்ற பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. 2007ஆம் ஆண்டு நாடாளாவிய ரீதியில் சுமார் 5000 மாணவர்கள் இப்பாடநெறிக்கான பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

ஆனால், இக்கற்கைநெறியானது கட்டாய பாடமாக்கப்படவில்லை. தொகுதி 3 பாடத்துக்குள் இப்பாடமும் விருப்பத்துக்குரிய பாடமாக இணைக்கப்பட்டுள்ளது.

எனினும், நாடளாவிய ரீதியில் மாணவர்கள் இந்தப் பாடத்தின்பால் ஈர்க்கப்பட்டதன் விளைவாக, 2011ஆம் ஆண்டு 4729 மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவர்களில் 83வீத மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இவ்வருடம் தொடர்பாடலும் ஊடகக் கற்கைநெறியும் என்ற பாடத்தைக்கற்று பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் தொகை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.


இந்தப் பாடநெறியும், ஏனைய பல பாடங்களையும்போல, பரீட்சைக்கான தயார்படுத்தல்களாக இருக்கின்றபோதிலும், இது செயன்முறையுடன் கூடிய கற்கைநெறியாக அமைய வேண்டும் என்பதே இதன் முக்கிய கருதுகோளாகும். தொடர்பாடல் பற்றிய அறிமுகம், அதன் வகைகள், வடிவங்கள் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படும் தொழிநுட்பத் திறன்கள், அச்சு, இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள் பற்றிய கற்கை மற்றும் ஊடகப் பிரதிநிதித்துவம் - அதாவது ஒரு ஊடகம் பிரதிநித்துவப்படுத்தும் விடயங்கள், அவற்றின் பொறுப்புகள் என்பவற்றோடு, ஒளிப்படக்கலை பற்றிய செயன்முறையுடன் கூடிய விளக்கம் என்பன தரம் 10இல் பயிலும் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது.



தரம் 11இல், மாணவர்களுக்கான செய்தி அறிக்கை தயாரித்தல், அதன் அடிப்படை அம்சங்கள், அச்சு ஊடகங்களின் அடிப்படைகள்,வானொலி ஊடகத்தின் அடிப்படைகள், சினிமா மற்றும் தொலைக்காட்சி ஊடகத்தின் அடிப்படைகள் என்பன கற்பிக்கப்படுகிறது.

இவற்றைவிட, வெளியீட்டு சுதந்திரம் மற்றும் உரிமை, விழிப்புணர்வுமிக்க பெறுனர் போன்ற பாட உள்ளடக்கங்களும் இதில் அடங்குகின்றன.

கற்பிப்பதற்கான பாடநூல்களை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்துள்ளது. எனினும், இக்கற்கையானது செயன்முறைப் பயிற்சிக்குட்பட்ட, அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும்போதுதான் முழுமை பெறமுடியும்.




இதனை வலியுறுத்தும் வகையில் கடந்த 24ஆம் திகதி மே மாதம் கொழும்பில் இடம்பெற்ற தேசிய ஊடக உயர் மாநாட்டில் (National Media summit) அறிக்கை வெளியிட்டுள்ள ஆசிய தகவல் ஊடகம் மற்றும் தொடர்பாடல் நிலையத்தின் ஆய்வாளரும் தலைவருமான கலிங்க செனவிரட்ண குறிப்பிடுகையில் -Mass communication teachers themselves have been media practitioners before they entered the academic field எனத் தெரிவித்துள்ளார்.

**க.பொ.த. உயர்தர பாடமாக**

தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் என்ற பாடநெறியானது க.பொ.த. உயர்தரத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2010 முதல் மாணவர்கள் க.பொ.த. உயர்தரத்தில் இப்பாடநெறியைப் பயின்று பரீட்சைக்குத் தோற்றி வருகின்றனர். க.பொ.த உயர்தரத்தில் இப்பாடநெறி பரந்த ஊடக அறிவை மாணவர்களிடையே ஏற்படுத்தும் வகையில் பாடப்பரப்புகள் வடி வமைக்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்திலே முதல் தடவையாக உடுவில் மகளிர் கல்லூரியில் இந்தப் பாடநெநி க.பொ.த. உயர்தரத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. கல்லூரி அதிபர் திருமதி.சிறாணி மில்ஸ் அவர்கள் குறித்த பாடநெறி தொடர்பாக அவருக்கிருந்த பிரக்ஞையும் ஆர்வமும் காரணமாக 2010ஆம் ஆண்டு கல்லூரியில் இப்பாட நெறியைத் தொடக்கி வைத்தார். இக்கற்கைநெறியைப் பயின்று 2012 க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் 21 மாணவர்கள் தோற்றியுள்ளனர். இவர்களில் இருவர் ஆங்கில மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

தற்போது யாழ் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரத்தில் இப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு கற்பிக்கப்படுகிறது.

ஏலவே குறிப்பிட்டதுபோல, க.பொ.த உயர்தரத்தில் பாடப்பரப்புகள் பரந்துபட்டு காணப்படும் அதேவேளை, பரந்த ஊடக அறிவையும் சில துறைசார் விருத்திகளைப் பெறும் வகையிலும் அமைந்துள்ளது. மேலும் முரண்பாடுகளற்ற ஆக்கபூர்வமான சமூக மேம்பாட்டை ஏற்படுத்தும் தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கான அறிவூட்டல்கள் என்பனவும் இதில் சிறப்பாக இடம்பெறுவதைக் காணலாம்.

**பொதுசனத் தொடர்பாடல் அலகு**

இப்பாடத்திட்டத்தில் துறைசார் விருத்திக்கும் தொழில்முறைக் கல்விக்கும் வழிகோலும் பாடப்பரப்புகளில் பொதுசனத் தொடர்பாடல் (Public relations ) என்னும் பாடஅலகு முக்கியத்துவமுடையது. எந்தவொரு உயர் அலுவலகத்திலும், நிறுவகத்திலும் பொதுசனத் தொடர்பாடலாளர் பணியாற்றுவதை அவதானிக்கலாம். குறித்த அந்தப் பணி பற்றிய கற்கையும், அவர்கள் ஊடகத்தை பயன்படுத்தும் வழிமுறைகள் பற்றியும் இதில் கற்பிக்கப்படுகிறது. இவற்றை பயில்வதனால் அத்துறை சார்ந்த ஆர்வம் ஏற்படுவதற்கும் துறைசார் விருத்தி, நிபுணத்துவத்தை எய்துவதற்கான தூண்டுதலும் மாணவர்களிடத்தில் ஏற்படுகிறது.

இதுபோன்று மொழியும் ஊடகப் பாவனையும் என்ற பாட அலகில் மொழியின் பிரயோகம், அச்சு ஊடகத்துக்கான மொழி, தொலைக்காட்சி, வானொலி ஊடகத்துக்கான மொழி, புதிய ஊடகத்துக்கான (New Media) மொழி என அவை பயன்படுத்தப்படும் விதத்தை ஒப்பிட்டு ஆராயும் கல்வி புகட்டப்படுகிறது. இது இவ்வூடகங்களுக்கான நிகழ்ச்சிகளைத்தயாரிப்பதற்கு உதவியான அறிவூட்டலாக அமைகிறது.


மேலும் இவை செயன்முறையுடன் கூடிய பயிற்சியை வழங்கும் கல்வியாக அமையும்போது மாணவர் குறித்த ஊடகங்களின் செய்திகள், நிகழ்ச்சிகளுக்கான எழுத்துப் பிரதிகளை உருவாக்கும் அறிவைமேலும் வளர்த்துக்கொள்ள எத்தனிப்பர்.

இவற்றைவிட, முரண்பாடுகள் வன்முறைகளைக் களைந்து கூடி வாழ்வதற்கான தொடர்பாடல், அபிவிருத்தி நோக்கிய தொடர்பாடல் என்பவற்றின் அறிவூட்டல்களால் மாணவர்கள் எந்தத்துறை சார்ந்தும் இணைந்து பணியாற்றுவதற்கான பக்குவத்தையும், ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களைச் செய்வதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றனர். இவற்றைவிட, ஊடகக் கலாசாரம், ஊடக அறிவு, ஊடக விமர்சனம் போன்ற பாடப்பரப்புக்கள், ஊடகங்களைச் சரியாக விளங்குவதற்கும் அவற்றைப் பயன்படுத்துவதற்கும், அவற்றுள் பிரவேசிப்பதற்கும், அவற்றை வழிநடத்துவதற்குமான தகைமைகளை மாணாக்கருக்கு வழங்குகிறது.

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களில் கொழும்புப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், களனி பல்கலைக் கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுரபல்கலைக் கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம் போன்றவற்றில் இப்பாடநெறி பட்டக்கல்வியாகப்போதிக்கப்படுவதால், குறித்த பாடநெறியைப் பயிலும் மாணாக்கர் உயர் கல்வி வாய்ப்பைப் பெறு வதற்கும் இதன்மூலம் வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

– கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மாகாணங்களில் இன்று தேர்தல் –

# 108 பேரைத் தெரிவு செய்ய 3073 வேட்பாளர்கள் போட்டி



(கொழும்பு)

மூன்று மாகாண சபைகளுக்கு இன்று இடம்பெறவுள்ள தேர்தலில் 108 பேரை தெரிவு செய்யவென 3073 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

33,36,417 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 3247 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 236 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 3 மாகாணங்களில் 37 தொகுதிகள் 21,000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் 4,000 கண்காணிப்பாளர்கள் களத்தில் உள்ளார்.

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்தி ஆகிய மூன்று மாகாண சபைகளிலிருந்து 108 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெறுகிறது.

தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எம்.மொஹமட் தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டின் தேர்தல் இடாப்பின் பிரகாரம் இன்று நடைபெறவுள்ள தேர்தலில் 33 இலட்சத்து 36 ஆயிரத்து 417 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

காலை 7 மணிக்கு அநுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, திகாமடுல்ல, இரத்தினபுரி, கேகாலை ஆகிய ஏழு மாவட்டங்களில் வாக்கெடுப்பு ஆரம்பமாகிறது.

தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்சென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரியவினால் 175 மேலதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல்கள் திணைக்களத்தினால் 400 கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் ப∴வ்ரல், க∴பே ஆகிய கண்காணிப்பு நிறுவனங்கள் உள்ளிட்ட பல தனியார் கண்காணிப்பு நிறுவனங்கள் நீதியானதும் அமைதியானதுமான முறையில் தேர்தலை நடத்தும் பொருட்டு மிகுந்த ஆர்வத்துடன் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை 21 ஆயிரம் பொலிஸார் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண குறிப்பிட்டார்.

வாக்குச் சாவடியொன்றுக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸார் மூவர் வீதம் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவரெனவும் மூன்று மாகாண சபைகளுக்குமுரிய தேர்தலுக்குமென 108 பொலிஸ் நிலையங்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கடமையிலீடுபடுத்தப்படும் 21 ஆயிரம் பொலிஸாருள் 123 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் 1400 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் அடங்குவர். மேலும் 70 பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் இவர்களில் உள்ளடக்கப்படுவரெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதியானதும் அமைதியானதுமான முறையில் நாளைய தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற வகையிலான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல்கள் திணைக்களம் முன்னெடுத்து வந்துள்ளது.

தேர்தல் முடிவடைந்ததும் தபால் மூல வாக்களிப்பின் முதலாவது பெறுபேற்றினை நள்ளிரவு 12 மணியளவிலும் முழுமையான வாக்களிப்பினது முதலாவது பெறுபேற்றினை நாளை அதிகாலை காலை 2 மணியளவிலும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் பிரதி ஆணையாளர் மொஹமட் தெரிவித்துள்ளார்.

வாக்குகள் 236 நிலையங்களில் எண்ணப்படும். வாக்கு எண்ணும் நிலையங்களுககு ப∴வ்ரல், க∴பே ஆகிய கண்காணிப்பாளர்களுக்கு பார்வையிடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் 26 நிலையங்களிலும் திகாமடுல்லையில் 29 நிலையங்களிலும் திருகோணமலையில் 19 நிலையங்களுமாக கிழக்கு மாகாணத்தில் 74 வாக்கு எண்ணும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அநுராதபுரம் மாவட்டத்தில் 42 நிலையங்களிலும் பொலன்னறுவையில் 23 நிலையங்களிலுமாக வடமத்திய மாகாணத்தில் 65 நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படும்.

கேகாலையில் 47 நிலையங்களிலும் இரத்தினபுரியில் 50 நிலையங்களிலுமாக சப்ரகமுவ மாகாணத்தில் 97 நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படவுள்ளன.

## சீன நிறுவனங்களுக்கு மீன்பிடிக்க அனுமதி

### மீனவர்கள் அதிருப்தி

பொத்துவில் கடலில் பாரியளவில் மீன்பிடியில் ஈடுபட சீன நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளதாக மீனவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். பொத்துவில் கடற்பரப்பில் இரண்டு பாரிய கப்பல்களில் சீன நிறுவனங்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

பொடம் ட்ரோலின் முறையின் மூலம் வலை விரித்து மீன் பிடிக்கப்படுகின்றது. சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட நபர் அல்லது ஓர் நிறுவனம் இந்த ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இது தொடர்பில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.


## சட்டத்தரணி குத்திக்கொலை



அத்துறுகிரிய - கோகந்தர - ஜயகத் மாவத்தை பகுதியில் உள்ள வீடொன்றில் சட்டத்தரணி ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்றுக் காலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அத்துறுகிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டவர் 45 வயதுடைய சட்டத்தரணி என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## இலங்கையிலிருந்து வருபவர்களை நட்பு ரீதியில் அணுகவேண்டும்



இலங்கையில் இருந்து வருபவர்களை நட்பு ரீதியிலேயே அணுக வேண்டும் என்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் பிரகாஷ் காரத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து கோயிலுக்கு வந்தவர்கள் மீது தாக்குதல் நடத்துவது துரதிருஷ்டவசமானது. தமிழகம் மற்றும் இலங்கையில் வசிக்கும் மக்கள் நட்புடனும், நல்லிணக்கத்துடனும் இருக்க வேண்டும்.

இலங்கையில் இருந்து வருபவர்களை நட்பு ரீதியிலேயே அணுக வேண்டும். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் அரசுகளுக்கு இடையேதான் பேச்சு நடைபெற வேண்டும். இரு நாட்டு மக்களும் மோதிக் கொள்வது ஏற்புடையதல்ல என்றார்.

## புராதன அலங்கார வாள் திருட்டு சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்


(கொழும்பு)

நுகவெல அதிகாரத்துக்கு உரிமையாக இருந்ததாக கூறப்படும் விலை மதிப்பற்ற தங்கம், வெள்ளி வேலைப்பாடுகள் கொண்ட புராதன அலங்கார வாள் அதன உறை, இரத்தினக்கற்கள் பாதிக்கப்பட்ட ஊன்றுகோல் கைப்பிடிகள், தங்க வெள்ளி வேலைப்பாடுகள் கொண்ட இடுப்புப்பட்டி என்பவை திருடப்பட்ட கொழும்பு நூதனசாலைத் திருட்டுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் கொழும்பு தடுப்புப் பிரிவின் தடுப்புக் காவலிலுள்ள மூன்று சந்தேக நபர்களை எதிர்வரும் 14ஆம் திகதிவரை தடுப்புக்காவலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்று முன்தினம்கட்டளையிட்டார்.

அஜித் குமார, பத்திரகே ஏக்கநாயக்க, சண்முகநாதன் சந்திரசேகரன் ஆகியோரே தடுப்புக்காவலில் உள்ள சந்தேக நபர்கள் ஆவர்.

இவர்களை கொழும்பு குற்றச்செயல் பிரிவில் தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்கு வழக்குரைஞர் சந்திரா அபயரட்ண ஆட்சேபம் தெரிவித்தார்.

முதலாவது, சந்தேகநபர், கிராண்ட்பாஸ் பகுதியில் முச்சக்கர வண்டி ஓடுபவர். ஏனைய இரண்டு சந்தேக நபர்களும்



பழைய பொருட்கள் நாணயங்களை வாங்கி விற்பவர்கள் இவர்களை கொழும்பு குற்ற பிரிவினர் ஆதாரமின்றி கைது செய்து தடுப்பில் வைத்திருப்பதாக அவர் கூறினார்.

நூதனசாலை திருட்டு தொடர்பாக வேறு மூவரும் பிலியந்தலையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அந்நியச்செலாவணி முகாமைத்துவ சட்ட வழிகாட்டலை சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

பொது நிதிக்கு 2.14 பில்லியன் ரூபா நட்டம் விளைவித்த கிரேக்க பிணைகள் மீதான முதலீட்டுக்கு எதிராக மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, வெளிநாட்டு செலாவணி முகாமைத்துவ சட்ட வழிகாட்டல்களை நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி உயர்நீதிமன்றம் மத்திய வங்கிக்குப் பணித்துள்ளது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுஜீவ சேனசிங்க தாக்கல் செய்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர், சர்வதேச நாணய கூட்டுறவு அமைச்சர் சரத் அமுனுகம, கணக்காய்வாளர் நாயகம், சட்டமா அதிபர் ஆகியோரை அவர் பிரதிவாதிகளாகக் காட்டியுள்ளார்.

இந்த கிரேக்க பிணைகளின் விலைகள் மிகவும் குறைவாக இருந்த காலத்தில் கூடுதல் விலை கொடுத்து தரகர்கள் ஊடாக இந்த பிணைகள் வாங்கப்பட்டதாக மனுதாரர் கூறியுள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் தூண்டுதலில் எதேச்சாதிகாரமான முறையில் சுயலாப நோக்கில் இந்த முதலீடு செய்யப்பட்டது.

இந்த கிரேக்க பிணைகளின் கொள்வனவு பற்றி விசாரித்து, நீதிமன்றுக்கு அறிவிக்கும்படி இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக குழுவுக்கு நீதிமன்றம் பணிக்க வேண்டுமென மனுதாரர் கேட்டுள்ளார்.

## பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாக மருத்துவர்கள் எச்சரிக்கை




(கொழும்பு)

சம்பள வீதங்கள் அதிகரிக்கப்பட வேண்டும், போக்குவரத்து மற்றும் ஏனைய விசேட படிகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தாம் விரைவில் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அரசாங்க மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரச சேவையில் மருத்துவ வாண்மையாளர்களை தக்கவைத்துக்கொள்வதற்காக, அவர்களின் சம்பளம் மற்றும் படிகள் அதிகரிக்கப்பட வேண்டும் எனப்பல வருடங்களாகக் கோரிவருகின்றதாகவும் ஆனால் அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை எனவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

## அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல்



(கொழும்பு)

இலங்கையின் பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கந்தானை பிரதேசத்தில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

அமைச்சரின் மூன்று ஆதரவாளர்கள் மீது ஒரு சில நபர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சிலாபம் முன்னேஸ்வரத்திலிருந்து களனிக்கு வான் மூலம் பயணம் செய்து கொண்டிருந்த போது வழிமறித்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த அமைச்சரின் ஆதரவாளர்கள் தெமட்டகொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

# மீள்குடியேறவுள்ள மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வு



(வசாவிளான்)

வசாவிளான் தெற்கில் இராணுவக் காவலரண்கள் அகற்றப்பட்ட பகுதியில் மக்கள் மீள் குடியேறவுள்ள இடங்களை ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் வடக்கு அமைப்பாளரும் வலி.வடக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜெயபாலசிங்கம்(அன்பு) நேரில் பார்வையிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு அவ்விடத்திற்குச் சென்ற இவர் அங்கு கூடியிருந்த மீள்குடியேற்றப்படவுள்ள மக்களுடன் கலந் துரையாடினார். தமக்கான மீள் குடியேற்றம் விரைவாக இடம் பெற நடவடிக்கைகள் எடுப்பதுடன் மீள்குடியேற்றத்தின் பின்னர் தமக்குரிய அடிப்படை வசதிகள் துரித கதியில் செய்து தருமாறும் மக்கள் அவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இச்சந்திப்பில் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் செ.திருஞானம், வசாவிளான் தெற்கு மீள்குடியேற்ற நலன் புரிச் சங்கத் தலைவர் மூத்த தம்பி விநாயகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். (165)

# முருங்கைக்காய் தற்போது 40ரூபா!

(வரணி)

கடந்த சில மாதங்களாக பெரும் கிராக்கியாக விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் தற்போது கிலோ 40ரூபாவாகச் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த திங்கட்கிழமை மந்திகை ஆலடிச் சந்தையில் வியாபாரிகளால் 20ரூபாவாக முருங்கைக்காய் கொள்வனவு செய்யப்பட்டதைக் காணமுடிந்தது. கடந்த சில மாதங்களாக 400ரூபாவிற்கு முருங்கைக்காய் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (150)

# பரமர் சங்கமம்



'பேராசை பெரும் தரித்திரம்' என்று நம்முன்னோர் அனுபவிக்காமலா சொல்லி வைத்தனர். நானினிடைக்கு அலச இருப்பதும் அதோடை ஓட்டிய ஒரு விடயம்தான்.

கடந்த மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில் தேர்த்திருவிழா நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து பரமரும் பஸ்சில பயணித்தார். சந்நதி கோவிலுக்கு 53ரூபா ஒருவழிக்கட்டணம் அதன்படியே எல்லாரிடமும் பற்றுச் சீட்டும் வழங்கப்பட்டது.

இலங்கை பேருந்து சேவை ஊர்தி ஒன்றிலேயே இது நடைபெற்றது. சில்லறைப் பிரச்சினையைக் கூறி 55ரூபா என்னிடமிருந்து பெறப்பட்டது.

அதுபோலவே அநேகமானவரிடம் பெறப்பட்டது. இதிலும் 5 ரூபா சில்லறைப்பிரச்சினை இருந்தது. அதனால் சிலரிடம் 60 ரூபாவாகவே பெறப்பட்டது.

தேர்த்திருவிழா என்றால் கேட்கவேண்டுமா? பஸ்சில் நிற்க முடியாவிட்டாலும்அடைஅடையெண்டு சனத்தைப் போட்டு நெரிச்சு ஏந்திக்கொண்டு போனால் ஒரு தடவையிலே 200 பேர்கள் அடங்கி இருப்பினம்.

55ரூபா காரர்களுக்கு 2ரூபாவும், 60ரூபா காரர்களுக்கு 7ரூபாவும் மிச்சம் வழங்கப்படவில்லை. இல்லையெண்டாலும் அந்த ஒரு தடவையிலே 600,700 ரூபாவுக்கு பிழை இருந்திருக்காது.

குறைந்தது பொழுது படுவதற்கிடையில் கோவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் நாலு றிப்பாவது போட்டால் 2000 ரூபாவுக்கு மேலால நடத்துநர் அன்று லாபம் பார்த்திருப்பார்.

இம்முறை யாழ். மாநகரசபையும் ஒரு கோடி ரூபாவுக்கு மேலால லாபமீட்டியதாக செய்திகள் வெளிவந்தன. அது போல பேருந்து சிற்றூர்தி சேவைகளும் லாபம் பார்த்திருக்கும்.

அதற்கு மேலாக தனித்தனியாக எத்தனை நடத்துனர்கள் சில்லறையைச் சாட்டி லாபம் கண்டிருப்பார்கள்?

'சில்லறை இல்லாத காரணமென நான் சொன்னேன். ஒரு பிரயாணி கூறினார். சில்லறை இல்லாததல்ல பிரச்சினை.தாறதுக்கு மனம் வரேல்லை' எண்டார்.

அப்படியே கோவிலடியில் நிண்டாப் போல பருத்தித்துறை தங்கச்சி வீட்டை போட்டு வருவமெண்டு சிற்றூர்தி ஒன்றில் ஏறினன். சந்நிதியில் இருந்து பருத்தித்துறைக்கு 35ரூபா என்று நடத்துநர் சொன்னார்.

'என்ன வரேக்க 20ரூபாதான எடுத்தே இப்ப ஏன் இப்படிக் கேக்கிறாய்; எண்டார் ஒரு பிரயாணி' 'அங்க இருந்து எம்டீயா திரும்பவேணும் அப்ப எப்படி எடுக்கறேண்டார்' நடத்துநர்.

எப்படிப் பார்த்தாலும் அன்யை தினம் எல்லாமாகப் பலகோடி ரூபா பரிவர்த்தனை ஆகிஇருக்கும். இதில் சம்பளத்தை விட நடத்துநர்கள் ஆளுக்கு 2000ரூபாவை மேலதிகமாகப் பெற்றிருப்பார்கள்.

சனமெல்லாத்தின்ர பெருமூச்சும் சும்மா விடுமே. அண்டைக்கோ அல்ல அடுத்தடுத்தநாளோ அவையளுக்கு ஒரு வில்லங்கம் வந்து அந்த அநியாயமாக அபகரிக்கப்பட்ட பணத்தைச் செலவு செய்யேக்க இதுகளை நினைப்பினமே!

'பேராசை பெரும் தரித்திரம' எண்டதை ஒவ்வொருவரும் அனுபவிக்கேக்கதான் உணருவினம். இல்லையே பின்னை நான் சொல்லுறது...

# மாங்குளம் - துணுக்காய் வீதி புனரமைப்புப்பணி துரிதம்

(கிளிநொச்சி)

மாங்குளம் - துணுக்காய் வீதி தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. நீண்டகாலமாகத் திருத்தப்படாத இவ்வீதியால் மக்கள் சிரமத்துடன் பயணம் செய்து வந்த நிலையில் தற்போது இவ்வீதி புனரமைக்கப்பட்டு வருவதால் போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வன்னிவிளாங்குளம் பகுதியிலிருந்து மாங்குளத்திற்கு வரும் பாடசாலை மாணவர்கள் உட்பட விவசாயிகள் சிரமமின்றிப் பயணம் செய்ய முடியும் எனவும் இதுவரை மாங்குளத்திலிருந்து 5கிலோ மீற்றர் தூரம் வரை வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாகத தெரிவிக்கப்பட்டுள்ளது. (143)

# கல்மடு – சம்புக்குளத்தில் கசிப்பு வேட்டை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கல்மடு பிரதேசத்தில் கசிப்புக்கோடா போத்தல்கள் வைத்திருந்த நபர் ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும தெரியவருவதாவது, கிளிநொச்சி கல்மடு சம்புக் குளம் பகுதியில் 469 கசிப்புக் கோடா போத்தல்களை விற்பனை செய்யவென பதுக்கி வைத்திருந்த முருகேசுப்பிள்ளை தயாநந்தன் என்பவரை கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். (சி)

# கலாசார மண்டபம் அமைப்பு

(வரணி)

வரணி - சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்திற்குக் கிழக்குப் பக்கமாக கலாசார மண்டபம் அமைப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மண்டபம் அமைப்பதற்கு உரிய காணியை சிட்டிவேரம் ஆலய பரிபாலன சபையினர் வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (150)

# 32 குழாய்க்கிணறுகள் யுத்தத்தால் பாதிப்பு

(கிளிநொச்சி)

போருக்குப் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவிப் பகுதியில் 32குழாயக் கிணறுகள் பாவிக்க முடியாத நிலையில் இருப்பதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

போருக்கு முன்னர் சிறப்பாக இருந்த இக் குழாய்க்கிணறுகள் தற்போது பழுதடைந்த நிலையில் பயன்படுத்த முடியாதுள்ளதால் இப்பிரதேச மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் நாளாந்தம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இக்குழாய்க் கிணறுகள் புனரமைப்பு செய்யப்பட்டால் தற்போதைய தண்ணீர் தட்டுப்பாடு ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டிருக்கும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் குடிநீர் இன்றி மக்கள் நீண்டதூரம் செல்வதாகவும் தெரிவிக்கும் மக்கள் துணுககாய் பிரதேச சபையினால் 2 பௌசர்கள் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதிலும் குடிநீருக்கான தேவைக்கு நீர் தமக்கு முழுமையாகப் போதாமல் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். (143)

# பொருட்களை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வழக்கில் உரிமை கோரப்படாத பொருட்களாக கட்டட வேலைகளுக்குப் பயன்படும் றூட்டர்-02, ஜிப்சோ-01, மர வேலைகளுக்குப் பயன்படும் வாச்சி-01 ஆகியவை யாழ். பொலிஸாரால் யாழ்.நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் உரிய ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம் என்றும், 06 மாதகாலத்திற்கு உரிமை கோர தவறும் பட்சத்தில் அவை அரசுடமையாக்கப்படும் என்றும் யாழ் நீதிவான் நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# முரசின் இன்றைய பலன்

(08.09.2012 - சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 23 ஆம் திகதி.
நட்சத்திரம் ரோகினி இரவு 8.57 வரை. திதி. அட்டமி, அமிர்த சித்தம்.
இராகுகாலம் 9.04 - 10.34 வரை. சுபநேரம் 3.04 - 4.34 வரை
எமகண்டம் 01.34 - 03.04 வரை, குளிகன் காலம் 6.04 - 7.34 வரை
கிருஷ்ண ஜெயந்தி.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம்  | கவலை. அயலவரிடம் அதிக பேச்சு கூடாது. கடும் உழைப்பால், தொழில்நிலை சீராகும். எதிர்பாராத செலவு. உறவினர் உங்களை எதிர்பார்ப்பர். |
| ரிஷபம்  | மனதில் புதிய ஞானம் பிறக்கும். சவால்களை வென்று சாதனை. தொழில் வளர்ச்சி அபரிமிதம். பணவரவு. கடன் தீரும். நட்பில் பெருமை. பணம் சேமிப்பீர்கள். |
| மிதுனம்  | வேலையில் கண்ணும் கருத்தும். நன்மை வரும். தொழில் வளர்ச்சி சீராகும். செலவு இருக்கும். உறவினர் உங்களால் மகிழ்வர். உடல்நலம் சீராக இருக்கும். |
| கடகம்  | தேவையற்ற வாக்குறுதி களைக் கொடுக்கக் கூடாது. உடல் நலக்குறைவு செயலில் தடுமாற்றம் தரலாம். பகை அறிந்து விலகுதல் நன்மை தரும். |
| சிம்மம்  | சினமடைவீர்கள். மன அமைதியை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். வாகன பயணத்தில் கவனம். ஒய்வு தேவை. |
| கன்னி  | வேலைகள் எளிதாய் முடியும். சூழ்நிலை சாதகம். தொழில் சிறந்து அதிக பணவரவு. குடும்பத் தேவைகள் தீரும். நண்பர், உறவினர் பாசம். மனதில் மகிழ்ச்சி. |
| துலாம்  | முன் யோசனையுடன் செயற்படுவீர்கள். போட்டி இருக்கும். தொழிலில் முன்னேற்றம். மேலதிக பணவரவு. உறவினர் வருகை. உடல்நலம் சிறக்கும். |
| விருச்சிகம்  | புதியவர்களின் அன்பு மனதை நெகிழ வைக்கும். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். உபரி வருமானம். தெய்வ வழிபாடு. மனதில் அமைதி. |
| தனுசு  | மனநிறைவு. தொழிலில் வளர்ச்சி. தாராள பணவரவு. பொன், பொருள் வாங்கப் பலன். உறவினரின் அன்பு மகிழ்ச்சி தரும். நண்பர்களிடம் பாராட்டு. |
| மகரம்  | சிறு சிறு சோதனைகள். பொறுமை நன்மை தரும். தேவை அதிகரிக்கும். பணம் வரும். உறவினர் வருவர். தொழில் வளர உழைப்பு. எதிர்பார்த்த செய்தி வரும். |
| கும்பம்  | உங்கள் பெருந்தன்மைக்கு நன்மை கிடைக்கும். தொழிலில் உதவி கிடைக்கும். பணச் செலவு வரலாம். வெளியூர் பயணமும். உறவினர் நண்பர்களால் ஆதரவு. |
| மீனம்  | மரியாதை பெறுவீர்கள். தொழிலில் போட்டி, பொறாமை குறையும். கடன் பணம் வரும். புகழுக்குரிய செயல் செய்வீர்கள். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை வளரும். |

# தென்னாபிரிக்கா சாதனையுடன் தங்கம்




(லண்டன்)

லண்டனில் நடந்து வரும் பாராலிம்பிக்ஸ் போட்டியின் ஆண்கள் 4 X100 மீற்றர் தொடர் ஓட்டப் பந்தயத்தில் தென்னாபிரிக்க அணி 41.87 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து புதிய உலக சாதனை யுடன் தங்கப் பதக்கம் வென்றது.

அந்த அணியில், செயற்கை கால்களுடன் ஓடி வரும் 'பிளேடு ரன்னர்' ஆஸ்கர் பிஸ்டோரியஸ் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. 2012 பாராலிம்பிக்கில் அவர் பெறும் முதல் தங்கம் இது. பிரேசில், அமெரிக்க அணிகள் தகுதியிழப்பு செய்யப்பட்ட நிலையில் சீனாவுக்கு வெள்ளிப் பதக்கமும், ஜேர்மனிக்கு வெண்கலமும் கிடைத்தன. ஆண்கள் 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளி வென்ற பிஸ்டோரியஸ், 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

வெற்றி குறித்து கருத்து தெரிவித்த ஆஸ்கர் பிஸ்டோரியஸ் நாம் அனைவரும் இணைந்து சிறப்பான ஓட்டத்தை வெளிப்படுத்தினோம். இதற்கு கிடைத்த பரிசாகவே இதனைக் கொள்கின்றோம். இரண்டு ஒலிம்பிக் போட்டிகளிலும் பங்குபற்றிய சிறப்பைப் பெற்றிருப்பது மகிழ்ச்சி. இது போன்ற தருணங்கள் எல்லோருக்கும் கிடைக்காது. அந்த வகையில் நான் அதிர்ஷ்டசாலி. உசைன் போல்ட் போன்ற ஜாம்பவான்களுடன் ஓடிய எனக்கு என்போன்ற வீரர்களுடன் ஓடிய அனுபவம் கிடைத்தமை ஒரு புதிய அனுபவம்தான் என்றார்.

# கைகுலுக்க மறுத்த ஈரான் வீரர்



(லண்டன்)

லண்டனில் பாராலிம்பிக் போட்டி பரிசளிப்பு விழாவில் மாற்றுத் திறன் வீரர் ஒருவர் இளவரசி கேத் மிடில்டனுடன் கைகுலுக்க மறுத்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ஒலிம்பிக் மைதானத்தில் மாற்றுத் திறன் வீரர்களுக்கான பாராலிம்பிக் விளையாட்டு போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் சாதனை படைத்த வீரர்களுக்கு பரிசளிக்கும் விழா கடந்த ஞாயிறன்று நடந்தது. பிரிட்டிஷ் அரச குடும்பம் சார்பில் ஜூனியர் இளவரசர் வில்லியமின் மனைவி கேத் மிடில்டன் கலந்து கொண்டார். வீரர்களுக்கு பரிசுகளையும் பதக்கங்களையும் வழங்கினார். வீரர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் வீரர்களுடன் கைகுலுக்கி பாராட்டுகளையும் தெரிவித்தார்.

தடகள போட்டியில் ஈரான் வீரர் மெர்டாட் கரம் சேத் (வயது-40) என்பவர் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார். அவரை பாராட்டி பதக்கத்தை அணிவித்த மிடில்டன், அவருக்குக் கைகொடுத்தார். ஆனால் ஈரான் வீரர் கைகுலுக்க மறுத்து பதக்கத்தை பெற்றுக் கொண்டு சென்று விட்டார். விழா மேடையில் நடைபெற்ற இந்த சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

இதுகுறித்து அரண்மனை வட்டாரங்கள் கூறுகையில், "இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த ஆண்கள் பொது இடங்களில் பெண்களுடன் கைகுலுக்குவதில்லை" என்றனர். கடந்த ஆண்டில் ஆப்கானுடனான கரப்பந்தாட்டப் போட்டி முடிந்த பின்பு, ஈரான் வீரர்கள் சிலர் பெண் நடுவருடன் கைகுலுக்கியது அந்நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# ஆஸியின் தங்க மங்கை



(லண்டன்)

மாற்றுத் திறனாளிகளுக்கான பாரலிம்பிக் போட்டிகள் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிருக்கான எஸ்7 400 மீற்றர் பிரிஸ்டைல் பிரிவில் அவுஸ்ரேலிய வீராங்கனை ஜாக்லின் பிரினி 4 நிமிடம் 59.02 வினாடியில் இலக்கை அடைந்து உலக சாதனை படைத்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

அமெரிக்காவின் ஜோர்டான் வெண்கலப்பதக் கத்தையும், பிரிட்டனின் ரோஜர்ஸ் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர். அவுஸ்ரேலியாவின் பிரினி, லண்டன் பாரலிம்பிக் போட்டியில் வென்ற 7ஆவது தங்கப்பதக்கம் இது வாகும். இவர் இதற்கு முன்னர் 50 மீ பிரிஸ்டைல், 100 மீ பிரிஸ்டைல், 50 மீ பட்டர்பிளை, 100 மீ பேக்ஸ்டோர்க், 200 மீ மெட்லி மற்றும் 4X100 பிரிஸ்டைல் தொடர் நீச்சல் என்று கலந்து கொண்ட அனைத்திலும் தங்கப் பதக்கத்தை வென்று தங்க மங்கையாக ஜொலிக்கிறார்.

# நான் ரெடி; நீங்க ரெடியா?



(கொல்கத்தா)

வாய்ப்புக் கொடுத்தால் இந்திய கிரிக்கெட் அணிக்கு பயிற்சி யளிக்கத் தயார் என்று முன்னாள் கப்டன் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்குப் பயிற்சியளிக்க மிகவும் ஆர்வமாக இருக்கிறேன். ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை காலம்தான் தீர்மானிக்கும். பயிற்சியாளர் பதவிக்கு நான் சரியான நபர் என்று இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) கருதினால், பயிற்சியளிக்கத் தயாராக இருக்கிறேன்.


வீரர்களின் திறமை, ஆட்டத் திறன், முன்னேற்றம் ஆகியவற்றில் என்னால் மாற்றம் ஏற்படுத்த முடியும் என்று நினைக்கிறேன். எனக்கு எல்லாம் வழங்கிய கிரிக்கெட்டுக்கு நான் ஏதாவது திருப்பி செய்ய வேண்டும் என்றால் அதற்கு ஒரேவழி பயிற்சியாளர் பணிதான்.

ஓர் அணிக்கு கப்டன்தான் மிக முக்கியமான நபர் என்று எப்போதுமே கூறி வருகிறேன். அவர்தான் களத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கிறார். நான் 6 ஆண்டுகள் இந்திய அணியின் கப்டனாக இருந்த காலத்தில் பல சமயங்களில் அணியின் கூட்டத்தில் சில முடிவுகளை எடுத்தாலும், சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு களத்தில் அந்த முடிவுகளை மாற்றியிருக்கிறேன். பயிற்சியாளர் என்பவர் கப்டனுக்கு ஓரளவு உதவ மட்டுமே முடியும்.

போட்டி தொடங்கிவிட்டால் பயிற்சியாளர் தனது இருக்கைக்கு சென்றுவிட வேண்டும். நானாக இருந்தாலும் சரி, ராவிட்டோ அல்லது சச்சினோ, டங்கன் பிளெட்சரோ யார் பயிற்சியாளராக இருந்தாலும் சரி தங்களின் ஆளுமைத் திறமையால் கப்டனுக்கு உதவ வேண்டும். போட்டி தொடங்கிய பிறகு வீரர்களுக்கு அறி-வுரை கூறக்கூடாது என்றார்.

# கனவு பலித்ததில் மகிழ்ச்சி

(லண்டன்)



எனது கனவு பலித்துவிட்டது. இதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன் என பாராலிம்பிக் போட்டியில் வெண்கலம் வென்ற .இலங்கை வீரர் பிரதீப் சஞ்சய் தெரிவித்தார்.

லண்டன் பாராலிம்பிக் போட்டிகளில் டி 46 குறைபாடுள்ளவர்களுக்கான 400 மீற்றர் ஆடவர் ஓட்டப்பந்தயத்தில் இலங்கையின் பிரதீப் சஞ்சய் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

பாராலிம்பிக் போட்டிகளைப் பொறுத்தவரை இலங்கையர் ஒருவர் வென்ற முதல் பதக்கம் என்றால் அது இதுதான். 49.28 விநாடிகளில் தூரத்தைக் கடந்து பிரதீப் சஞ்சய வெண்கலம் வென்றார்.

இலங்கை இராணுவத்தில் லான்ஸ் கோப்ரல் நிலையில் இருக்கும் சிப்பாயான சஞ்சய், 2008இல் கிளிநொச்சியில் நடந்த ஒரு மோட்டார் குண்டுத் தாக்குதலில் வலது கரம் செயலிழந்து போனவர்.

ஒலிம்பிக் போட்டிகளில் என்னால் ஒரு வெண்கலப் பதக்கமாவது நிச்சயம் வெல்ல முடியும் என்று எனது பயிற்சியாளர் திரும்பத் திரும்பக் கூறிவந்தார். வெற்றி பெற வேண்டும் என்று நானும் தீர்மானமாக இருந்தேன். எமது அணியின் சக வீரர்களும் எனக்கு மிகவும் உதவியாக இருந்தனர் என்று பிரதீப் சஞ்சய் தெரிவித்தார்.

# அடுத்த இலங்கை பிரீமியர் லீக்கை புறக்கணிப்போம்

## சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் சங்கம் எச்சரிக்கை

(டுபாய்)

இலங்கையின் பிறீமியர் லீக் தொடரை அடுத்தாண்டு புறக்கணிக்குமாறு சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களைக் கேட்க வேண்டி ஏற்படும் என சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. வீரர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின்படி வங்கி உத்தரவாதங்கள் வழங்கப்படாமை குறித்தே சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் சங்கம் தனது திருப்தியின்மையை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை பிறீமியர் லீக் தொடரில் வீரர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின்படி வீரர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஊதியத்தொகை தொடர்பாக வங்கி உத்தரவாதத்தை ஒவ்வொரு அணியும் வழங்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் சங்கம், எனினும் திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டதன் பின்பும் வங்கி உத்தரவாதங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என அச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஒப்பந்தத்தின்படி வழங்கப்பட வேண்டிய வங்கி உத்தரவாதங்களைக் காண்பிக்குமாறு இலங்கைக் கிரிக்கெட் சபையிடமும், இலங்கை பிறீமியர் லீக் தொடரின் சந்தைப்படுத்தலுக்குப் பொறுப்பான சமர்செட் வென்றசர்ஸ் நிறுவனத்திடமும் சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் சபை ஏராளமான தடவைகள் கேட்டுக் கொண்ட போதிலும் அவை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்த அச் சபை, அடுத்த வருடம் வங்கி உத்தரவாதங்கள் வழங்கப்படாவிடின் வீரர்களை இத்தொடரைப் புறக்கணிக்குமாறு கோரிக்கை விடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

எனினும் இக்குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த சமர்செட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சன்டிப் பாமர், வங்கி உத்தரவாதப் பத்திரங்களைப் பெறுவதில் தாமதங்கள் ஏற்பட்டதாகவும், எனவே பணக் கொடுப்பாணைகள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், வங்கி உத்தரவாதப் பத்திரங்களை விட பணக் கொடுப்பாணைகள் அதிகம் வலுவுள்ளமை எனவும் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த சன்டிப் பாமர், சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் சங்கத்தின் பிரச்சினை என்னவெனப் புரிந்துகொள்ள முடியாதுள்ளதாகவும், வீரர்களுக்கான ஊதியங்கள் வழங்கப்படுவதில் பிரச்சினைகள் ஏற்பட்டாலேயே அச்சங்கம் தலையிடுவது வழக்கம் எனவும், இலங்கை பிறீமியர் லீக்கைப் பொறுத்தவரை அனைத்து வீரர்களின் ஊதியங்களும் வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் சங்கம், இலங்கை பிறீமியர் லீக்கின் அனேமான வீரர்களுக்குக் குறித்த நேரத்தில் ஊதியங்கள் வழங்கப்பட்டு முடிக்கப்பட்டதாகவும், எனினும் ஓர் அணியின் வெளிநாட்டு வீரர்கள் சிலருக்கு 50 சதவீதமான ஊதியப் பணம் இன்னும் வழங்கப்பட்டு முடிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தது. அத்தோடு சம்பியன் பட்டம் வென்ற ஊவா நெக்ஸ்ட் அணியின் வீரர்களுக்கு குறித்த நேரத்தில் ஊதியம் வழங்கப்படா நிலையில் வீரர்கள் தொடரிலிருந்து வெளியேறுவதாகப் பயமுறுத்திய பின்னரே ஊதியங்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தது. எனினும் இலங்கை பிறீமியர் லீக்கில் பங்குபற்றிய அனைத்து வீரர்களுக்குமான ஊதியங்கள் வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதாக சன்டிப் பாமர் உறுதியாகத் தெரிவித்தார்.

# புதிய அத்தியாயம்



(விசாகப்பட்டினம்)

நியூசிலாந்துடனான ருவென்ரி -20 கிரிக்கெட் தொடர் எனக்கு புதிய அத்தியாயமாகத் தான் இருக்கும் என இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான 32 வயதான ஹர்பஜன்சிங் ஓராண்டுக்குப் பிறகு இந்திய அணிக்குத் திரும்ப அழைக்கப்பட்டு உள்ளார். இந்தியா-நியூசிலாந்து இடையே விசாகப்பட்டினத்தில் இன்று நடக்கும் முதலாவது ருவென்ரி - 20 போட்டியில் அவர் களம் காணுகிறார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு நான் இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டேன். அணியில் இருந்து நான் விலக்கப்படுவது இது முதல்முறையல்ல. என்றாலும் இந்த தடவை அதிக காலம் இடம் அளிக்கப்படாமல் வெளியில் வைக்கப்பட்டு விட்டேன். இது முதல் முறையாக அணியில் நீக்கப்பட்டதை போன்ற உணர்வைத் தருகிறது. இப்போது நான் 2ஆவது முறையாக கிரிக்கெட்டில் அறிமுகம் ஆகிறேன் என்று நான் சொல்ல மாட்டேன். இருப்பினும் கிரிக்கெட்டில் எனக்கு இது புதிய நாள். புதிய அத்தியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன் என்றார்.



எஸ்.டபிள்யூ செனவிரட்ன ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டித் தொடரில் கிளிநொச்சி மாவட்ட வீராங்கனையான ஜெயராணி (உதவி அரசாங்க அதிபர் (தலைமைப் பீடம்) கிளிநொச்சி, மாவட்டச் செயலகம்) தொடரின் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவாகி கிளிநொச்சி மாவட் டத்திற்கே பெருமை தேடிக் கொடுத்தார். இதனைக் கௌரவிக்கும் வகையில் கிளிநொச்சி செயலகத்தினால் ஜெயராணிக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. கடந்த 5ஆம் திகதி கிளிநொச்சி செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி, ஜெயராணிக்கு விருது வழங்குவதைக் காணலாம். (142)

# கிராமங்கள் தோறும் கால்பந்து வீரர்களை இனங்காணல் முதல் சுற்றுப் போட்டிகள் ஆரம்பம்

கிராமங்கள் தோறும் கால்பந்தாட்ட வீரர்களைத் தோற்றுவிக்கும் நோக்குடனும், சர்வதேச தரத்திலான கால்பந்தாட்ட வீரர்களை உருவாக்கும் நோக்குடனும் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கால்பந்துப் போட்டித் தொடரின் முதல் தெரிவு ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இப்போட்டியினை இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சும், மாகாண விளையாட்டுத்துறை அமைச்சும், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனமும் இணைந்து நடத்தத் திட்டமிட்டுள்ளது. இலங்கையிலுள்ள 329 உள்ளூராட்சிப் பிரிவுகளிலும் உள்ள 3290 அணிகளிற்கிடையே போட்டிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்கென ஒவ்வொரு உள்ளூராட்சிப் பிரிவுகளிடமுள்ள விளையாட்டுக் கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் தேசிய கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான வீரர்கள் தெரிவு உள்ளூராட்சி மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் ஆகிய மூன்று நிலைகளிலும் போட்டிகள் நடத்தித் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

உள்ளூராட்சி மட்டப் போட்டிகள் இந்த மாதம் இடம்பெறவுள்ளது. மாவட்ட மட்டப் போட்டிகள் ஒக்ரோபர் 10ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

மாவட்ட மட்டப் போட்டிகளிலிருந்து சிறந்த கால்பந்தாட்ட வீரர்கள் 20 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களே மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றவர்களாவர். மாகாணங்களிற் கிடையேயான இறுதிப் போட்டி டிசம்பர் 15ஆம் திகதி கொழும்பு சுகதாச விளையாட்டு அரங்கில் நடைபெறும். இப்போட்டியிலிருந்து சிறந்த 30 வீரர்கள் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்படவுள்ள வீரர்களிற்கு சிறந்த சம்பளத்துடன் கூடிய தொழில் வாய்ப்பு, விசேட உதவித்தொகையுடன் மாதாந்தம் 75.000 ரூபா சம்பளம், மருத்துவ வசதி கள், வெளிநாட்டுப் பயிற்சிகள் என்பன வழங்கப்படவுள்ளன.

இப்போட்டி தொடர்பில் மேலதிக தகவல்கள் தேவைப்படும் விளையாட்டுக்கழகங்கள் பிரதேச செயலகங்கள் தோறும் உள்ள விளையாட்டு அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (22)

# இன்றைய ஆட்டம்

(அளவெட்டி)

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் மென்பந்தாட்டசுற்றுப்போட்டி கோலாகலமான முறையில் இன்று 8.30 மணிக்கு ஆரம்ப வைபவத்துடன் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. 40 கழகங்களுக்கு மேல் பங்குபெறும் இத்தொடரில் இன்றைய தினம் முதற் சுற்றுப் போட்டிகளின் விபரம் வருமாறு

காந்திஜீ எதிர் முத்துத்தம்பி அணியும், நியூ வோரியர்ஸ் எதிர் மாதகல் யுத் அணியும், றொக்கெட் எதிர் பயர்வொஸ் அணியும், இணுவில் கலை ஒளி எதிர் ஸ்ரீமுருகன் அணியும், மல்லாகம் ஆர்.டி.எஸ் எதிர் சென்மைக்கல் அணியும் மோதவுள்ளன.

வெற்றிபெறும் அணிகளுக்கானபோட்டிகள் தொடர்ந்து நடைபெறும்என போட்டி ஏற்பாட்டாளர்கள்தெரிவித்துள்ளனர்.(93)

# இதயம் வென்ற போட்டி

(லண்டன்)

லண்டன் பாராலிம்பிக் போட்டிகள் பிரிட்டன் மக்களின் இதயங்களை கொள்ளை கொண்டுள்ளதாக லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் அமைப்புக் குழு தெரிவித்துள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் போட்டிகள் இதற்கு முன்னர் நடைபெற்ற போட்டிகளைக் காட்டிலும் மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்று வருகிறது.

ஒலிம்பிக் போட்டி நிறைவு பெற்றதையடுத்து மாற்றுத் திறனாளிகளுக்கான பாராலிம்பிக் போட்டிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இதுகுறித்து லண்டன் ஒலிம்பிக் அமைப்புக் குழு (லோகாக்) கூறுகையில், பாராலிம்பிக் போட்டிகள் பிரிட்டன் மக்களைக் கொள்ளைக் கொண்டது. அடுத்த 48 மணிநேரத்தில் வரும் பார்வையாளரோடு பார்வையாளர் எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தொட்டுவிடும். ஒவ்வொரு நாளும் கூடுதலாக பத்தாயிரம் அனுமதிச் சீட்டு அச்சிட்டாலும் சில நிமிடங்களில் அவையனைத்தும் விற்றுவிடுகின்றன.

தொலைக்காட்சியிலும் மக்கள் நாள்முழுக்க விளையாட்டுகளைக் கண்டு இரசிக்கின்றார்கள். இது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. அடுத்து வரும் போட்டித் தொடர்கள் இதனை விடச் சிறப்பான முறையில் இடம்பெறும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் என ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது.

## விளையாட்டு செய்திகள்

# வேலணைக்கான கால்பந்து இன்று ஆரம்பம்

(வேலணை)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிகளின் முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் வேலணைப் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 21 வயதுப்பிரிவிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப்போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது என வேலணை பிரதேச செயலகப் பதில் விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் தெரிவித்துள்ளார்.

இதில் வேலணைப் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து அணிகளையும் போட்டிகளில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்துமாறு போட்டி ஏற்பாட்டாளர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (93)

# தேசிய மட்ட வலைப்பந்து மஹரகமவில்

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் அகில இலங்கை ரீதியாக மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15, 17, 19 வய்துப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 15, 16, 17 ஆம் திகதிகளில் மஹரகம இளைஞர் சேவைகள் மன்ற உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் வட மாகாண அணிகள் சார்பில் பின்வரும் பாடசாலை அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.


15 வயதுப் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த அராலி சரஸ்வதி வித்தியாலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

17 வயதுப் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த கொக்குவில் இந்துக் கல்லூரி.

19 வயதுப் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

வடமாகாணத்தின் சார்பில் வலைப்பந்தாட்டப் போட்டிகள் அனைத்திலும் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகள் கலந்து கொள்வதுடன் குறிப்பாக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 07 அணிகளும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த இரண்டு அணிகளும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வலிகாம கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகள் தேசிய மட்டப் போட்டிகளில் சாதிக்கும் என்றும், குறிப்பாக, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீராங்கனைகள் சிறந்த ஆட்டத்திறனுடனும், பல போட்டிகளில் வென்ற அனுபவங்களுடன் உள்ளமையால் தேசிய மட்டப் போட்டியில் அதிகம் எதிர்பார்க்கப்படும் அணியாக உள்ளதாக விளையாட்டு ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும், கொழும்பு போன்ற இடங்களில் மோதுவது என்பது சற்றுக் கடினமான காரியம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.





கோப்பாய் புதுவை முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி கடந்த முதலாம் திகதி சிறப்புற நடைபெற்றது. இதில் சிறார்களின் வண்ணமயமான பல போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றது. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்), வலி.கிழக்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளருமான இ.ஐங்கரன், ஈ.பி.டி.பியின் அச்சுவேலிப் பிரதேச அமைப்பாளர் தர்மராஜா, மக்கள் வங்கியின் கிளை முகாமையாளர் தங்கராசா, கிராம அலுவலர் தி.குணசீலி, முன்பள்ளி இணைப்பாளர் சிறிதேவி மற்றும் பெற்றோர் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசின் முக்கியஸ்தர்கள் முன்னறிவிப்பின்றி வரக்கூடாது என்பதில் தொடங்கி, இன்று வட இந்தியாவிற்கு புனிதப் பயணம் மேற்கொள்ளும் பௌத்த மதத்தவர்கள்

# வேண்டுவது என்ன, அரசியல் தீர்வா தொடர் அவலமா?





- என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.

மீது தாக்குதலில் இறங்கி, பின்னர் பள்ளி மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஆகியோரைக் கூட தமிழ்நாடு வேண்டப்படாத வர்களாக ஆக்கி வருகிறது. இதற் கிடையில், தமிழ்நாட்டில் அமைந் துள்ள இந்திய இராணுவப் பள்ளிகளில் இலங்கை வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதை எதிர்த்து, முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறிவிப்புகளும், மத்திய அரசிற்கான அறிவுரைகளும், மற்றும் சிறு கட்சிகள் மற்றும் குழுக் களின் போராட்டங்கள் வேறு. இவை அனைத்தும், இலங்கை அரசிற்கு எதிரான நிலைமையை இந்தியாவில் ஏற்படுகிறதோ இல்லையோ, இந்தியா விற்கு எதிரான நிலைப்பாடுகளை இலங்கையில் பலவாறாக தோற்று வித்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளின் இத்தகைய நிலைப்பாடு, இரு நாடுகளுக்கும் அவற்றின் மக்களுக்கும், குறிப்பாக இலங்கையில் உள்ள ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்களுக்கும் எந்தவிதத்திலும் பயன் அளிக்கப்போவதில்லை. மாறாக, அவர்கள் மத்தியில் அனாவசிய பயத்தையே ஏற்படுத்தப்போகிறது. ஆனால், இதனை தமிழ் நாட்டில் உள்ள அரசியல் தலைமைகள் உணர்ந்ததாக இல்லை. அவர்களுக்கு இலங்கைப் பிரச்சினை குறித்த அறிவுறுத்தல்கள் கூறிவருபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களும் ஒன்றில் அறிவிலிகளாகவே இருக்கி றார்கள். அல்லது, இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை விட்டுவிட்டு, அவர்களையே பிரச்சினைப் பொருட் களாக மீண்டும் ஆக்கிவிட்டு, அதனால் ஏற்படும் கொடுமைகளிலும், குழப்பங் களிலும் குளிர்காய விரும்புகிறார்கள்.

இனப்பிரச்சினையை பொறுத்த வரை, அண்மையில் தி.மு.க. தலைமை முன்னின்று நடத்திய "டெசோ" மாநாட் டில், இலங்கையில் உள்ள தமிழ் கட்சிகளோ, தமிழ் தலைவர்களோ இவர்களில் எவருமே கலந்து கொள்ளா தது குறிப்பிடத்தக்கது. இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, இனப்பிரச்சினை குறித்து தமிழ் நாட்டில் கடந்த சில தசாப்தங்களாக நடந்துவரும் போட்டி அரசியலில் தாங்கள் சிக்கிக் கொண்டு விடக்கூடாது என்பது குறித்த பயம்.

இரண்டாவது காரணம், தாங்கள் இலங்கை அரசுடன் நடத்திவந்த பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர்வதற்கு எந்தவித இடர்பாடும் வந்துவிடக் கூடாது என்பது குறித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கவலை. அவர்களைப் பொறுத்தவரை யில் என்று இருந்தாலும் ஒன்றுபட்ட இலங்கையில் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன் மூலம் பிரச்சினை களுக்கு தீர்வு காண வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள்.


அந்தவிதத்தில், கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் வாக்களிப்பு நடைபெற்ற போது ஜெனிவா நகர் சென்று, வாக்களிப்பில் பங்குபெறும் நாடுகளின் அரசியல் தலைமை மற்றும் இராஜரீக அதிகாரிகளை கண்டு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட கருத்தை கூட்டமைப்பு தலைமை நிராகரித்தது. மாறாக பின்னர் யாழ்ப்பாணத்தில் நடந்த "மே தின" விழாவில் கூட்ட மைப்பு தலைவர் சம்பந்தன், இலங்கை தேசிய கொடியை தனது கையில் எடுத்து தனது மக்கள் முன்னர் உயர்த்திப் பிடித்தார். அதாவது, ஒன்றுபட்ட இலங்கையில் மட்டுமே தாங்கள் அரசி யல் தீர்வை எதிர்பார்ப்பதை அவர் வெளிப்படையாகவே உணர்த்தினார். அவரது செய்கை, இலங்கைக்கு அப்பால் இருந்து இனப் பிரச்சினைக் கான தீர்வு குறித்து மாற்று கருத்துக் கள் கொண்டிருந்த குழுக்களுக்கு விடப்பட்ட சமிக்ஞையும் கூட.

இந்தப் பின்னணியில், இலங்கை மற்றும் சிங்கள - பௌத்த மக்களின் மீது தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப் பட்டு வரும் காழ்ப்புணர்ச்சி, இலங் கையில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி விடக் கூடாது.

இலங்கையில் உள்ள தமிழ் தலை மைகள், நாட்டில் உள்ள அரசியல் நிலைமை மற்றும் தங்களது இனத்தவர் களிடம் இன்னமும் உள்ள பாதுகாப்பு உணர்வை குலைத்துவிடும் நிலைமையை தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் ஏற்படுத்திவிடக் கூடாது என்று அவர்களிடம் எடுத்துக் கூற வேண்டும். தங்களது உள்ளார்ந்த இந்த உணர்வுகள் குறித்தும் தங்களது இத்தகைய முயற்சிகள் ஆகியவை சிங்கள அரசியல் தலைமை மற்றும் சாதாரண மக்களிடம் சென்றடைய வழி செய்ய வேண்டும்.

இங்கு கேள்வியே தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளும் புலம்பெயர் தமிழர்களும் வேண்டுவது இனப்பிரச்சி னைக்கு அரசியல் தீர்வா, அல்லது அதன் பெயரில் பிரச்சினைகளை மேலும் ஊதி பெரிசாக்கி, அப்பாவி இலங்கை தமிழ் மக்களை மீண்டும் அபலை நிலைக்கு தள்ளிவிடுவதா? இதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஆனால், அந்த பதிலில் நிகழ்காலத்தின் தவறுகளின் படிவங்களே இருக்கும் என்பதை இன்றைய தலைமுறையினரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# உங்கள் உடல் நலத்துக்கு...



- உடலில் எந்த உறுப்பில் சுளுக்கு ஏற்பட்டாலும் உடனே நிவாரணம் பெற, சுளுக்கு ஏற்பட்ட இடத்தில் வெந்நீர் ஒத்தடம் கொடுத்து, தேக்கரண்டியளவு தேங்காய் எண்ணெயைக் காய வைத்து, அதில் சிறிது மிளகுத்தூளையும், கற்பூரத்தையும் போட்டுக் கலக்கி, சுளுக்குள்ள இடத்தில் பூசினால் சுளுக்கு போய்விடும்.
- 40 வயதுப் பெண்களுக்கு லேசான தலை சுற்றல் வரும். இதைத் தடுக்க சந்தனம், கொத்துமல்லி விதை, நெல்லி வற்றல் மூன்றையும் சம அளவில் சேர்த்து இரவில் ஊற வைத்து காலையில் வெறும் வயிற்றில் ஒரு அவுன்ஸ் குடித்தால் தலை சுற்றல் நிற்கும்.
- மாதவிலக்கின்போது ஏற்படும் வலியைக் குறைக்க கட்டிப் பெருங்காயத்தை நீரில் கெட்டியாகக் கரைத்து மடக் மடக் என்று குடித்துவிட வேண்டும்.
- வயிற்றுப் புண்ணினால் வரும் வயிற்று வலியாக இருந்தால் மிதமான சூடான வெந்நீரைக் கொஞ்சம் கொஞ்சமாக குடித்தால் உடனே வலி குறையும்.
- அதிகமாக மது குடித்ததினால் உண்டான தலைவலி அல்லது அஜீரணத்தால் உண்டான தலைவலி எல்லாம் வெந்நீர் சாப்பிடுவதால் குண-மடையும்.
- இஞ்சியைப் பல் வலிக்கும் இடத்தில் வைத்துக்கொண்டு இஞ்சிச்சாறு அதில் வரும்படி பல்லினால் அழுத்தமாக கடித்துக் கொண்டால் பல்வலி நிமிஷத்தில் மறைந்துவிடும்.
- "காஸ்டிக் அல்சர்" தொந்தரவு உள்ளவர் கள் வயிறு சம்பந்தமான எந்தக் கஷ்டமாக இருந்தாலும் அதற்குத் தினமும் காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் சிறிது வேப்பிலைக் கொழுந்தை சாப்பிட வேண்டும்.
- வாய்ப் புண்ணிற்கு பச்சரிசி, பயத்தம் பருப்பு, ஒரு தேக்கரண்டி வெந்தயம், நிறைய பூண்டு உரித்துப் போட்டு குக்கரில் வைத்து வெந்தவுடன் கெட்டியான தேங்காய்ப்பால் கலந்து சாப்பிட வேண்டும்.
- பேதியோ, வயிற்றுப்போக்கோ ஏற்பட்டால் வெந்தயத்தை நன்றாக கறுப்பாக வறுத்து, மாப்போல அரைத்து ஒரு தேக்கரண்டி அளவில் சிறிது தேன் விட்டுக் கலந்து உட்கொள்ள சரியாகிவிடும்.
- திராட்சைப்பழமும், உலர்ந்த திராட்சையும் ஜீரண சக்தியை வலுப்படுத்தி குடல்புண், சிறுநீரகம் முதலியவற்றைச் சுத்தப்படுத்துகிறது.
- மலச்சிக்கல் உடையவர்கள் இரவில் பச்சை வாழைப்பழம் சாப்பிடுவது உகந்தது.

## மேன்மைப் பழமொழிகள்

- பார்த்துக் கெட்டது பிள்ளை
  பார்க்காமல் கெட்டது பயிர்
- கேட்டுக் கெட்டது குடி
  கேட்காமல் கெட்டது கடன்
- பேசிக் கெட்டது நாக்கு
  பேசாமல் கெட்டது சுற்றம்
- உண்டு கெட்டது வயிறு
  உண்ணாமல் கெட்டது உறவு
- அலைந்து கெட்டது மனசு
  அலையாமல் கெட்டது ஆரோக்கியம்

# நம் மகிழ்ச்சி பிறருக்குத் தொல்லையாக இருக்கலாமா?



மதிய வேளை.

மரப்பொந்து ஒன்றில் ஆந்தை ஒன்று தூங்கிக் கொண்டிருந்தது.

கீழே புல்தரையில் வெட்டுக்கிளி பாட்டுப்பாடிச் செய்து கொண்டிருந்த ஆர்ப்பாட்டம் ஆந்தையின் தூக்கத்திற்கு இடையூறாக இருந்தது.

அந்தப் பாட்டு சகிக்க முடியாத நிலையில், வெட்டுக்கிளியிடம் அது பாடுவதை நிறுத்தும்படி ஆந்தை கேட்டது.

ஆனால் வெட்டுக்கிளி கேட்கவில்லை. அது ஆந்தையிடம் கோபமாக, "நீ குருட்டுக் கழுதை! பகலில் வெளியே தலை காட்டுவதில்லை. எல்லா ரும் இரவில் தூங்கிய பின்புதான் நீ வெளியே வருவாய். இரவில் உன்னைப் போன்ற திருடர்கள்தான் வெளியில் திரிவார்கள்" என்று திட்டியது.

ஆந்தை சிறிது நேரம் யோசனை செய்தது.

நம் தந்திரத்தால்தான் இந்த வெட்டுக்கிளியை அடக்க வேண்டும் என்று தீர்மானித்தது.

சில நிமிடங்கள் யோசனைக்குப் பிறகு, "நண்பனே, என்னைத் தூங்கவிடாமல் நீ செய்ய விரும்பினால் செய்துவிட்டுப் போ. ஆனால் விழித்துக் கொண்டிருப்பதற்கு இனிமையாய் இருப்பதற்காகவாவது உன் சங்கீதம் உபயோகப்படட்டுமே... உன் சாரீரம் இனிமையானது. அதைத் தேவகானம் மாதிரி செய்வதற்கு என்னிடம் ஓர் அமிர்தம் இருக்கிறது. அதில் இரண்டு துளி சாப்பிட்டால் போதும். உன் குரலும் அமிர்தமாய் விடும். மேலே வா, தருகிறேன்" என்றது.

ஆந்தையின் இனிமையான பேச்சைக் கேட்டு ஏமாந்த வெட்டுக்கிளி மரத்தில் ஏறி ஆந்தையிடம் போனது.

வெட்டுக்கிளி பக்கத்தில் வந்ததும் ஆந்தை, அப்படியே பிடித்து நசுக்கிக் கொன்றது.

பிறருக்கு நம்முடைய தொல்லையில்லாத வரை நமக்கும். தொல்லை இல்லை.

# கணினி யானைகள்!


கடந்த ஜூலையில் இங்கிலாந்தில் நடந்த முக்கிய நிகழ்வு ஒலிம்பிக் மட்டுமல்ல... இன்னொரு முக்கியமான நிகழ்வும் நடந்திருக்கிறது. பிரபஞ்சத்தைப் பற்றி ஆராயும் Cosmology படிப்புக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்ட உலகின் முதல் கொஸ்மோலஜி சூப்பர் கம்ப்யூட்டர் இங்கிலாந்தில் கடந்த ஜூலை மாதம்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. வானவியலிலும் பிரபஞ்ச அறிவியலிலும் இந்த சூப்பர் கம்ப்யூட்டர் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லப்பட்டாலும், இதற்கு எதிர்ப்பு இருக்கிறது.

ஒரு சூப்பர் கம்ப்யூட்டரை நிர்வகிப்பது என்பது யானை-யைக் கட்டி மூன்றுவேளை சாப்பாடு போடுவது போன்றது. உதாரணத்துக்கு, கடந்த 2010 முதல் 2011 வரை உலகின் நம்பர்-1 சூப்பர் கம்ப்யூட்டராக இருந்த கே கணினியைப் பார்க்கலாம். நாம் வீட்டில் பயன்படுத்தும் கணினியில் இப்போதெல்லாம் இரண்டு அல்லது மூன்று கோர் ப்ரொசஸர்கள் வருகின்றன. இந்த கே கணினியின் ப்ரொசஸர் கோர்களின் எண்ணிக்கை 5,48,352. இந்தக் கணினிக்குத் தேவை ய[illegible] வன்பொருட்கள் எல்லாம் நீண்ட பெரிய அறை ஒன்றில் றாக்கைகள் அமைத்து அடுக்கப்பட்டிருக்கும். அப்படி 672 றாக்கைகளைக் கொண்டது கே கணினி. இத்தனை பிரமாண்டமான கணினிகள் இயங்க வேண்டுமென்றால், அதற்கான மின்சாரமும் பிரமாண்ட அளவில்தான் தேவைப்படும்.

கே கணினி, இயங்குவதற்கு 9.9 மெகா வாட் மின்சாரத்தை எடுத்துக் கொள்கிறது. வருடத்துக்கு இதற்கான மின்சாரத்துக்கு மட்டுமே ஒரு கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகிறது. உலகின் டொப் 10 சூப்பர் கம்ப்யூட்டர் என்று பட்டியலிடப்பட்டுள்ள பத்து கணினிகளும் இயங்க மொத்தம் 42.8 மெகா வாட் மின்சாரம் செலவாகிறது. இதை 40 ஆயிரம் வீடுகளுக்கு வழங்க முடியுமாம். புவி வெப்பமடைதல், மின்சார சிக்கனம் என்றெல்லாம் உலகமே பேசிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இன்னும் ஒரு சூப்பர் கணினி தேவையா என்பதே சமூக ஆர்வலர்களின் கேள்வி!

எதற்காக சூப்பர் கம்ப்யூட்டர்?

நாளைய உலகுக்காக செய்யப்படும் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு மிகுந்த செயல் திறன்



கொண்ட கணினிகள் கண்டிப்பாகத் தேவை. அதற்காகத்தான் உலக நாடுகள் பலவும் போட்டி போட்டுக் கொண்டு சூப்பர் கணி-னிகளைத் தயாரிக்கின்றன. உலகில் உள்ள முக்கியமான 500 சூப்பர் கம்ப்யூட்டர்களில், 274 அமெரிக்காவுக்குச் சொந்தமானவை. அடுத்தபடியாக சீனாவில் 41 உள்ளன. இந்தியாவிலும் 40 உள்ளது.

# காரை மடித்து வைக்கலாம்!



புடவை, சட்டையைப் போல இனி காரையும் மடித்து சிறிதாக்கி வைக்கலாம். ஆம், நெருக்கம் மிகுந்த நகரங்களுக்கும் அதன் தொல்லை பிடித்த பார்க்கிங் ஏரியாக்களுக்கும் ஏற்றபடி ஒரு வாமன வாகனத்தை வெற்றிகரமாக தயாரித்திருக்கிறது ஹிரிக்கோ என்ற ஸ்பெயின் நாட்டு நிறுவனம். வாகன ஓட்டுனர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்கள் புன்னகையோடு ஓட்டிச் செல்லும்படி வாகன வடிவமைப்பையே மாற்றியமைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் உருவானதுதான் ஹிரிக்கோ. வாகன உதிரிப்பாக உற்பத்தியாளர்கள் பலரும் இணைந்த கூட்டமைப்பான இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள முதல் மற்றும் ஒரே வாகனம் இதுதான். அதனால்தான் இந்தக் குட்டிக் காருக்கு ஹிரிக்கோ என்ற அந்நிறுவனத்தின் பெயரே சூட்டப்பட்டுள்ளது.

இரண்டு பேர் பயணம் செய்யக்கூடிய இந்தக் கார், பற்றரியில் இயங்குகிறது. ஒரு முறை சார்ஜ் செய்தால் 120 கிலோமீற்றர் வரை ஓடும். மணிக்கு 100 கி.மீ. வேகம் வரை பறக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக சாரதி ஒரு பட்டனைத் தட்டினால் ஐந்தரை அடி நீளமே உள்ள இந்தக் கார் இரண்டாக மடிந்து, சுருங்கி, ஒரு டுவீலரின் அளவுக்குள் அடங்கிவிடுகிறது. இன்று நாம் பயன்படுத்தும் சாதாரண கார் ஒன்றை நிறுத்தும் இடத்தில் இந்தக் கார்கள் மூன்றை நிறுத்த முடியுமாம்.

இந்த கார் ஒரு சிறு கணினியோடு இணைக்கப்பட்டுள்ளது. இதனால் நமது ஸ்மார்ட் போன் மூலமே இந்தக் காரை நகர்த்தலாம். நாம் வெளியே நின்று கொண்டு ஸ்மார்ட் போன் மூலமாக இதை எந்த பொந்துக்குள்ளும் பார்க் செய்து வெளியேயும் எடுத்துவிட முடியும்.


ஹிரிக்கோ நிறுவனம், ஆரம்பத்தில் இதன் விலையை 16,400 அமெரிக்க டொலர் என நிர்ணயித்துள்ளது. அதாவது, கிட்டத்தட்ட இருபது இலட்சம் ரூபாதான்! காரை நிறுத்துவதற்கு இடம் கிடைப்பது அரிதாகிவிட்ட நிலையில் இது ஒரு விலையா என்ன!

# மானசரோவர், கடன், போட்டியாளர்கள்

ஜெமினி ஸ்ருடியோவில் வேலை பார்த்தவர் என்பதால் அசோகமித்திரனுடைய இளமைக் கால ஹைதராபாத் எந்த அளவுக்கு அவரை பாதித்துள்ளதோ அதே அளவில் சினிமா அனுபவங்களும் அவரை ஆக்ரமித்திருக்கிறது.

“மானசரோவர்” நாவலின் இ[illegible]டு முக்கிய கதாபாத்திரங்களின் Role Models மணிக்கொடி எழுத்தாளர் கி.ராமச்சந்திரனும், ஹிந்தி நடிகர் திலீப்குமாரும் என்பது சுவாரசியமான விஷயம்.

மணிக்கொடியில் “சொத்துக் குடையவன்”, “ஹாஸ்ய பத்திரிகாசிரியன்” போன்ற பல கதைகளை எழுதியவர் ஏ.கே.ராமச்சந்திரன் என்ற கி.ரா. ஒவ்வொரு மணிக்கொடி இதழும் வெளி வருவதற்கு கி.ராமச்சந்திரனின் ஒரே மோதிரம் அடகு வைக்கப்படும். பின்னாளில் இவர் ஜெமினி ஸ்ருடியோ கதை இலாகாவில் வேலைக்குச் சேர்ந்தார். ஔவையார் படத்தில், வஞ்சிக்கோட்டை வாலிபன் படத்தில் இவர் பெயரை டைட்டிலில் பார்க்கலாம்.



க.நா.சு தன் “இலக்கியச் சாதனையாளர்கள்” நூலை இவருக்கும் சேர்த்து சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

யூசுப்கான் பாகிஸ்தானிலிருந்து வந்தவர். ஹிந்தி திரையுலகில் இன்றும் கூட Living Legend திலீப்குமார் என்று பிரபலமான யூசுப்கான் பாகிஸ்தானியா? இந்தியனா? சில வருடங்களுக்கு முன் பாகிஸ்தான் அரசு திலீப்குமாருக்கு பெரிய விருது வழங்கி கௌரவித்தது. மும்பையில் சிவசேனா கண்டனம் தெரிவித்தது. திலீப்குமாருக்கும் Identity Crisis உண்டு. 22 வயது சாய்ரா பானுவைத் திருமணம் செய்து கொண்ட போது திலீப்குமாருக்கு 44 வயது. சிவாஜி கணேசனிடம் உங்களுக்குப் பிடித்த நடிகர் யார் என்று கேட்டால் “ஹொலிவுட்டில் மார்லன் பிராண்டோ. ஹிந்தியில் யூசுப் பாய்” என்று தான் பதில் வரும்.

நாவல், சிறுகதை போன்ற படைப்புகளில் கற்பனையை ஒருமுகப்படுத்துவதற்காக வேண்டி முன்மாதிரிகள் படைப்பாளிகளுக்கு அவசியம். உதாரணமாக அசோகமித்திரனின்



“விரல்” கதையில் வருவது எழுத்தாளர் ஜி.நாகராஜன். ஆனால் கதையில் உள்ளபடி அசோகமித்திரனுக்கு அவர் பள்ளி நண்பன் அல்ல.


“கரைந்த நிழல்கள்” நாவலில் சிவாஜிகணேசன் பற்றி, இயக்குனர் பீம்சிங் பற்றி கடுமையான விமர்சனம் இருப்பதைக் காண முடிகிறது.

அசோகமித்திரனின் “கடன்” சிறுகதையில் வரும் நடிகர் ஸ்ரீராம் அப்போது ஜெமினி ஸ்ருடியோவின் நம்பிக்கை நட்சத்திரம். ஜெமினி கணேசனுக்கு அந்தக்



காலகட்டத்தில் ஸ்ரீராம் தான் போட்டியாளர்! 1953இல் “மூன்று பிள்ளைகள்” படத்தில் பெயர் வாங்கும்படி நடித்தவர். ராமண்ணாவின் முதல் படம் “வாழப்பிறந்தவன்” (1953) படத்தில் கதாநாயகனாக நடித்தவர். 1954இல் “மலைக் கள்ளன்” படத்தில் வில்லனாக எம்.ஜி.ராமச்சந்திரனுடன் சண்டை போட்டவர் ஸ்ரீராம். 1960களில் “பாலும் பழமும்”, “பச்சை விளக்கு”, “பழனி”, “இதயக்கமலம்” போன்ற படங்களில் சிறிய கதாபாத்திரங்களில் நடித்துத் தான் இந்த நம்பிக்கை நட்சத்திரம் தொலைந்து போனது. “கடன்” சிறுகதை நடிகர் ஸ்ரீராமின் பொருளாதாரச் சிக்கலை சுற்றிச்சுழன்று நெஞ்சைப் பிழியும் உருக்கமான சித்திரமாக விரிந்திருக்கிறது.

“போட்டியாளர்கள்” சிறுகதை “வஞ்சிக்கோட்டை வாலிபன்” படத்தில் கதாநாயகிகளாக நடித்த வைஜயந்தி மாலா, (அழகான இளவரசி) பத்மினி (அழகான பிரஜை) இருவரை வைத்து எழுதப்பட்டது. பத்மினி வீட்டில் படத்திற்கான டான்ஸ் ரிகர்சல். ஹிந்தி நடிகர் ராஜ்கபூர் கூட இந்தக் கதையில் வருகிறார். டான்ஸ் ரிகர்சலின் போது Sound Assistant ஆக வரும் இளைஞனின் விரசமான நடவடிக்கை அதிர்ச்சியேற்படுத்துகிறது. ஒரு நடிகை என்றில்லை. எந்தப் பெண்ணுமே ஒருவன் பார்க்கின்ற பார்வையின் நோக்கத்தை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். அந்நியனின் பார்வையில் விரச-மும் வேட்கையும் பெண்ணை அவமானப்படுத்துகிற விஷயம். “போட்டியாளர்கள்” கதையில் அந்த சவுண்ட் அசிஸ்டண்ட் பலர் முன்னிலையில் நடிகையின் குடும்பத்தார் கூட இருக்கின்ற நிலையில் Masturbation என்கிற அளவிற்கு மிகவும் ரசாபாசமாக நடந்துகொள்கிறார். ஒரு திரைப்பட நடிகை இளமையழகை மூலதனமாக்கி



தன்னுடைய “நிழல்பிம்பம்” பலரையும் தவிதவிக்கச் செய்வதில் தான் தொழில் வெற்றி அடங்கியுள்ளது என்பதை நன்கறிந்தவள் தான். என்றாலும் கூட, பகிரங்கமாக தன் நிஜ உடல் விரச வேட்கை, பார்வை நடவடிக்கைகளால் காயப்படும்போது இவளுடைய பெண்மைக்கு ஏற்படும் மன உளைச்சல், வேதனையின் நுட்பமான துயர பரிமாணம் பரிபூர்ணமாக பதிவாகியுள்ள கதைதான் “போட்டியாளர்கள்”.

மானசரோவர், விரல், கடன், போட்டியாளர்கள் கதையின் பாத்திரங்கள் திலீப்குமார், மணிக்கொடி கி.ராமச்சந்திரன், ஜி.நாகராஜன், ஸ்ரீராம், வைஜயந்திமாலா, பத்மினி என கண்டுபிடித்து நான் அசோகமித்திரனிடம் சொன்னபோது அவருக்கே உரித்த பாணியில் அசந்து ஆச்சரியப்பட்டு “அடடே! அடடே! எப்படி! எப்படி ராஜநாயஹம்! கண்டுபிடித்து விட்டீர்களே! அடடே!” என்றார்.

“பாத்திரத்தின் முன் மாதிரியை அடையாளம் கண்டு கொள்வது ஒரு தனித்தேர்ச்சியின் பேரில் வருவது” என்று அசோகமித்திரன் ஜூலை 2004 காலச்சுவடு இதழில் எழுதியிருக்கிறார்.

- R.P.ராஜநாயஹம் -





சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

## பொது அறிவு துணுக்குகள்

**1**

1) உலகின் மிக நீண்ட மலைத் தொடர் எது?
2) மருத்துவத்திற்கான நோபல் பரிசு வழங்கும் அமைப்பு எது?
3) நோபல் பரிசு பெற்ற முதல் பெண் மணி யார்?
4) உலகின் முதல் அணுசக்தி நிலையம் எங்கே கட்டப்பட்டது?
5) உலகின் மிகப்பெரும் பெற்றோல் ஏற்றுமதி செய்யும் நாடு எது?




**3**

ஆறு கார்கள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. கறுப்புக் கார் ஒரு முடிவில் நிற்கிறது.

- நீலக்கார் கறுப்புக் காருக்குப் பக்கத்தில் இல்லை
- நீலக்கார் கறுப்புக் காரிலிருந்து இரண்டாவது தரிப்பிடத்தில் நிற்கிறது.
- பச்சைக் கார் கறுப்புக் காரில் இருந்து மூன்றாவது தரிப்பிடத்தில் நிற்கிறது.
- வெள்ளைக் கார் சிவப்புக் காருக்கு அருகில் உள்ளது.
- மஞ்சள் கார் சிவப்புக் காரிலிருந்து மூன்றாவது தரிப்பிடத்தில் நிற்கிறது.

1) வெள்ளைக்கார் எந்த நிறக்கார்களுக்கு இடையில் உள்ளது. (...............)
2) இரண்டு முடிவிலும் உள்ள கார்களுக்கு அருகில் உள்ள கார்களின் நிறங்கள் யாவை? (...............)
3) பச்சைக்காருக்கு அதிக தொலைவிலுள்ள காரின் நிறம் யாது? (...............)
4) கணிதத்தில் தவறிய மாணவர்கள் 40%, ஆங்கிலத்தில் தவறிய மாணவர்கள் 20%, இரண்டு பாடங்களிலும் தவறிய மாணவர்கள் 15% எனின் முழுப்பாடங்களிலும் சித்தியடைந்தோர் எத்தனை வீதம்? (...............)
5) 20 இலக்கங்களின் சராசரி 1000 ஆயின், அந்த இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது? (...............)

## புதிர்ப்போட்டி 7 இல் வெற்றியீட்டியோர்



**பெயர்:** ய.தேவகீர்த்தனா
**பாடசாலை:** யாழ். நெடுந்தீவு மகா வித்தி.



**பெயர்:** ராஜ்குமார் சுமித்தா
**பாடசாலை:** யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி



**பெயர்:** இ.பிரியதர்சினி
**பாடசாலை:** உடுவில் மகளிர் கல்லூரி.




**பெயர்:** த.மதுஷா
**பாடசாலை:** யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.



**பெயர்:** கு.ஜெயராமன்
**பாடசாலை:** யா/ மத்திய கல்லூரி.

**2**

கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தினுள் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்கள் ஒரு குறிப்பிட்ட வடிவமைப்பில் அமைந்துள்ளன. அதனை இனங்கண்டு ஆஇஇெழுஈஇஐஇ இடைவெளிகளில் வரவேண்டிய இலக்கங்களைக் குறிப்பிடுக.




1) 11 M = (...............)
2) 17 N = (...............)
3) 18 O = (...............)
4) 19 P = (...............)
5) 20 Q = (...............)

## புதிர்ப்போட்டி 7 இன் சரியான விடைகள்

| 1 | 2 |
|---|---|
| 1) 1 | 1) 14 |
| 2) 3 | 2) 09 |
| 3) 1 | 3) 132 |
| 4) 1 | 4) 28 |
| 5) 1 | 5) 52 |
| 6) 2 | |

## அனுப்பவேண்டிய முகவரி

**புதிர்ப்போட்டி இல....**
**தினமுரசு**
**இல .373 பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

புதிர்ப்போட்டி 9 இற்கான விடைகளை எதிர்வரும் செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

## முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியில் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ..................................

பாடசாலையின் பெயர் ..................................

தரம் :- :-..................................

தொலைபேசி இல.:-..................................

முகவரி :-..................................

..................................



## புதிர்ப்போட்டி 7 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்

| | |
|---|---|
| **பெயர்:** ரா.சஸ்மிதா<br>**பாடசாலை:** யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி. | **பெயர்:** க.தினேஸ்<br>**பாடசாலை:** யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி. |
| **பெயர்:** பா.சாருணி<br>**பாடசாலை:** யா/ வேம்படி மகளிர் பாடசாலை | **பெயர்:** செ.அபிமன்<br>**பாடசாலை:** யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி |
| **பெயர்:** கே.கோகிலவாணி<br>**பாடசாலை:** யா/ செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை | **பெயர்:** யோன்சன் ஏரன் டேவிஸ்<br>**பாடசாலை:** யா/ பரியோவான் கல்லூரி |
| **பெயர்:** பி.மேசிலோட்<br>**பாடசாலை:** யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி | **பெயர்:** து.கோகுலன்<br>**பாடசாலை:** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி |
| **பெயர்:** ய.தேவகீர்த்தனா<br>**பாடசாலை:** நெடுந்தீவு மகா வித்தியாலயம். | |

# சாதாரண தரத்தின் சித்திவீதத்தை அதிகரிப்பது குறித்து ஆராய்வு






(யாழ்ப்பாணம்)

கல்விப் பொது தராதர பரீட்சைகளில் மாணவர்களின் சித்தி வீதத்தினை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மீளாய்வு கூட்டம் யாழ் பொதுநூலகத்திலுள்ள வட மாகாண கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்.சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இத்திட்டம் யுனிசெவ் நிறுவனத்தின் நிதிஅனுசரணையுடன் முன்னெடுக்கப்படுவதுடன் திட்டத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு முன்னேற்றம் தொடர்பாக இக்கூட்டத்தில் மீளாய்வு செய்யப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதிக் கல்விப் பணிப்பாளர், யுனிசெவ் பிரதிநிதிகள், கல்வித்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். கடந்த ஆண்டு இடம்பெற்ற க.பொ.த(சா/த) பரீட்சையில் வட மாகாண மாணவர்கள் தமது முழுத்திறனையும் வெளிக்காட்ட தவறியிருந்தனர். இதன்காரணமாக மாணவர்களின் சித்தி வீதம் குறைவடைந்திருந்தது. சித்தி வீதத்தினை அதிகரிக்க வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

# சர்வதேச தரத்திலான ஆங்கில மொழிப்பரீட்சை




(யாழ்ப்பாணம்)

இலங்கை மற்றும் லண்டனில் தொழில் வாய்ப்புப்பெற இருப்பவர்களுக்கு் மற்றும் தொழிற்துறை அபிவிருத்திக்கான சர்வதேச தரத்திலான ஆங்கிலப் பரீட்சைகளை (TOEIC) முதன்முறையாக எதிர்வரும் புதன்கிழமை யாழ். நகரில் அறிமுகப்படுத்தி வைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே Knowiedge Merchchising நிறுவனம் இலங்கை மற்றும் லண்டனில் தொழில் வாய்ப்புப்பெற இருப்பவர்கள் மற்றும் தொழில் துறை அபிவிருத்திக்கான இந்த சர்வதேச தரத்திலான ஆங்கிலப் பரீட்சையை (TOEIC) அறிமுகப்படுத்தியிருந்தது.

தற்சமயம் இந்தப் பரீட்சைகள் முதன் முறையாக யாழ்.நகரில் அறிமுகப்படுத்தி வைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு எதிர் வரும் புதன்கிழமை 10.30 மணிக்கு யாழ். நகரில் ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளது.


நேற்று முன்தினம் யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையின் மேல்மாடியில் மூன்றாவது) இந்நிறுவனத்தின் யாழ். கிளை அலுவலகத்தில் இது சம்பந்தமான பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது. இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் அந்த நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் ஜெ.விவேகானந்தன், C.O கக்கீ உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு ஏழு நாட்களில் பெறுபேறு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. யாழ். மாவட்டத்தில் மூன்று பரீட்சை நிலையங்களில் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைகள் நடைபெறவுள்ளது எனவும் தெரியவருகின்றது. (பா,இ)

# கசூரினாவில் உல்லாசப்பயணிகளுக்கு சுத்தமான குடிநீர் விநியோகம்

(காரைநகர்)

காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதியில் உல்லாசப் பயணிகளின் குடிநீர் தேவையை நிறைவேற்றும் வகையில் அங்கு அமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கிகளுக்கு சுன்னாகத்திலிருந்து பௌசர் மூலம் குடிநீர் நிரப்பப்பட்டு வருகிறது.



இங்கு வருகின்ற மக்களுக்காக காரைநகர் பிரதேச சபையினால் முன்னர் வழங்கப்பட்ட குடிநீர் குடிப்பதற்கு உகந்தது அல்ல என காரைநகர் சுகாதார பரிசோதகரினால் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பிரதேச சபையினால் இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கசூரினா கடற்கரைக்கு நாளாந்தம் அதிகளவிலான உல்லாசப்பயணிகள் வருகை தருகின்ற நிலையில் தற்போது குடிநீரை இம்மக்கள் பெற்றுக்கொள்ள கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50)

## கிணறுகளில் நீர்மட்டம் குறைவு; குடிநீருக்காக அலைகின்றனர் மக்கள்

(வடமராட்சி)

தற்பொழுது நிலவும் கடும் வறட்சியான காலநிலையால் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களின் கிணறுகளில் நீர்மட்டம் படிப்படியாகக் குறைவடைந்து செல்வதால் தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.


குறிப்பாக இப்பிரதேசத்தில் ஒருபோதும் வற்றாத கிணறுகள் கூட தற்போது வற்றியுள்ளதால், தண்ணீருக்கு நீண்டதூரம் செல்லவேண்டியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சில குடியிருப்பாளர்கள் தமது வீடுகளில் கிணறுகளைத் தோண்டும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பிரதேசத்திலுள்ள நீர்நிலைகளிலும் நீர் வற்றியுள்ளதால் கால்நடைகளும் குடிநீரின்றி அலைந்த திரிவதைக் காணமுடிகிறது. (38)

# மெய்தான் பாருங்கோ...

## ஆவிகளும்; அண்டப்புளுகுகளும்



அண்டைக்கொருக்கா காலங்காத்தால என்ர சகபாடி வீட்டை வந்தான் பாருங்கோ. வந்தவன் சும்மாயிருக்கேல்லை. பிரபாகரன் செத்தது உண்மைதான் மச்சான். அவற்ர ஆவி இப்ப சிங்களச் சனங்களைப் பழிவாங்கத் தொடங்கியிட்டுது... எண்டு அலறவும் ; உளறவும் தொடங்கியிட்டான் கண்டியளே!

இதென்னடா விடியுறது விடியக்கு முன்னம் வந்து இந்த விசரன் ஆவி வருகுது... அது கூவி வருகுதெண்டு அலட்டுறான்... என எனக்குள்ள நான் யோசிச்சபடி... என்னடா பிரச்சினையெண்டு அவனைத் திருப்பிக்கேட்டன்.

அதுக்கு அவன் என்ன சொன்னவன் தெரியுமே?

போன 25ஆம் திகதி மச்சான் புதுக்குடியிருப்பில பிரபாகரன் இருந்த 'சுரங்க வீட்டை' கொழும்பில இருந்து வந்த ஒரு வயசு போன பொம்புளை பாக்கப்போயிருக்குது. போன இடத்தில பிரபாகரன்ர ஆவி அந்த மனிசியைத்தள்ளி விழுத்தி சாக்காட்டி பழிக்குப்பழி தீர்த்திருக்குது.

இப்பிடி அவன் சொன்னதுதான் தாமதம் எனக்கு என்ர உடம்பில்யுள்ள நாடி... நரம்பு... மூக்கு... முரசெல்லாம் ரத்தம் சூடேறி வெடிக்கிற மாதிரி ஒரு உணர்வு வந்ததுது.

எடவிசரா! அந்த மனிசி தடக்குப்பட்டு விழுந்ததுக்கும் பிரபாகரன்ர ஆவிக்கும் என்னடா சம்பந்தம்... எண்டு எரிச்சலாக் கேட்டன்.

இல்லை மச்சான்! நேற்றுப்பின்னேரம் 'கோப்பறேசனில' உதைப்பற்றித்தான் எல்லாரும் கதைச்சவங்கள். இப்ப அந்தச் சுரங்க வீட்டை போக எங்கட ஆட்கள் பயப்பிடுகினம் கண்டியே!

நாசமறுப்பு... நாசமறுப்பு... பிரபாகரன் இன்னும் சாகேல்லை. அவர் உயிரோடுதான் இருக்கிறார்... எண்டு தமிழ்நாட்டில இருக்கிற வை.கோ.சாமியாரும், 'சிறைமீண்டசெம்மல்' சீமானும் நம்பிக்கொண்டிருக்க, இவன்பாவி ஏடாகூடமாக் கதைச்சு அவையளின்ர அரசியல் இருப்புக்கு மண்அள்ளிப்போட நினைக்கிறானே... எண்டு நான் எனக்குள்ள நினைச்சுக்கொண்டு... அவனுக்குச் சொன்னன்.

பிரபாகன்ர ஆவி சிங்களச்சனத்தை பழிதீர்க்கிறது உண்மையெண்டால், போயும் போயும் ஒரு வயசுபோன கிழவியையே பழிதீர்க்க வெளிக்கிடவேணும்? அப்பிடி ஆவியள் பழிதீர்க்க வெளிக்கிட்டிருக்குதெண்டால், சண்டையில் ஆமியளைவிட எங்கட சனங்கள்தான் கூடுதலாகச் செத்திருக்குதுகள் கண்டியே! செத்துப்போன சனங்களின்ர ஆவியள், சண்டை நடந்த இடங்களில முகாம் அடிச்சு இருக்கிற ஆமிக்காரரையெல்லாம் இதுவரையில பழிக்குப்பழி தீர்த்திருக்கவல்லோ வேணும்! அது ஏன் நடக்கேல்லை?

சரி இதை விடுவம், அந்தச் சுரங்க வீட்டுகுள்ள பிர்பாகரன்ர ஆவி உலாவுதெண்டு உனக்கு ஆரடா உசுப்பேத்தினவன்... எண்டு நான் அவனைப் பேச, அவன் யோசிக்கத் தொடங்கியிட்டான் பாருங்கோ!.

எடேய்! சொல்வார் சொன்னாலும் கேட்கிறவைக்குப் புத்தி இருக்கவேணும் கண்டியே... சிங்களச்சனத்தை இஞ்சாலிப்பக்கம் வராதபடிக்குச் செய்யுறதுக்கும் திரும்பவும் ஒரு அடிபாட்டு அரசியலைத் தொடக்கிறதுக்கும் ஆரோ ஒருவன் நஞ்சுவிதையள் தூவ வெளிக்கிட்டிருக்கிறான். நாங்கள் கொழும்புப்பக்கம் போனால் தெகிவளையில இருக்கிற மிருகக்காட்சிச்சாலை மற்றும் 'கோல் பேஸ்'... எண்டு சுத்திப்பாக்கப் போறமாதிரித்தான் அங்கத்தேச் சனங்களும், பிரபாகரன் கடைசியாய் இருந்த இடமெண்டு பாக்க வருகினம். இது தப்புமில்லை; தவறுமில்லை.

சண்டையொண்டைத் தொடக்கிப்போட்டு அதில குளிர் காயுறதுக்கு பலபேர் பாத்துக்கொண்டிருக்கினம். இதுக்கு போரால பாதிக்கப்பட்டிருக்கிற நாங்கள் இனி இடம் குடுக்கக் கூடாது கண்டியே! இதில நாங்கள் தெளிவாக இருக்கவேணும்.

ஒருத்தன் உயிரோடை இருந்து இன்னொருவனைப் பழிதீர்க்கிறதாலையோ அல்லது ஆவியா அலைஞ்சு பழிதீர்க்கிற மாதிரிக்கதையளைக் கட்டுறதாலையோ இனி எதுவும் ஆகப் போறதில்லை. புதுக்குடியிருப்பு - சுரங்கவீட்டுக்குள்ள நடந்த அந்தச் சம்பவம் தற்செயலாக நடந்ததே ஒழிய, அது வேறையொண்டுமில்லை... எண்டு நான் அவனுக்கு விளக்கமளிச்சாப் போலதான் அவனும் உண்மையை விளங்கிக்கொண்டான்.

நீ சொல்லுறதும் சரிதான் மச்சான்... நேற்று கோப்பறேசனில மூக்கு முட்ட ஆரோ ஒருத்தன் மண்டிப்போட்டு, ஏதோ உளறி போட்டான். நானும் அதைக் கேட்டுப்போட்டு வந்து உன்னையும் குழப்பிப் போட்டன்... எண்டு அவன் தன்னை நொந்து கொண்டான்.

எங்கட ஆவியள் பழிதீர்க்கவெளிக்கிட்டா இப்ப வன்னியில ஒரு ஆமிக்காரனும் இருந்திக்கமாட்டான்... இனி யார் யாரைப் பழிவாங்கி என்ன...? இது எப்பவோ முடிஞ்ச காரியம்... எண்டு யோகர்சுவாமி சொன்னமாதிரிச் சொல்லிப்போட்டு என்ரசகபாடி எழுப்பிப் போனான் பாருங்கோ!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.



தாதியர் ஒருவர் ஆனைப் பந்தி விடுதியில் வைத்து தாக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தாதியருக்கான விடுதி வசதி ஏற் படுத்தி தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்தி தருமாறும் கோரி நேற்று யாழ் போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவின் முன்பாக தாதியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

(படங்கள்: ராஜ்குமார்)

# வடபகுதி மக்களுக்கு 6000 வீடுகள்; வீடமைப்பு அதிகார சபை அறிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தில் வாழும் தமிழ் மக்களின் நலன்கருதி ஆறாயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது

இந்திய நிதி ஒதுக்கீட்டின் கீழ் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வீடுகள் யாவும் இந்திய நிதியுதவியை மாத்திரம் பயன்படுத்தி நிர்மாணிக்கப்படவுள்ளதால், மக்களின் பங்களிப்பையும் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் புதிதாக வீடொன்றை நிர்மாணிப்பதற்கு ஐந்து இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதமும் புனரமைப்பதற்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

உத்தேச வீடமைப்புத் திட்டத்திற்கு உள்வாங்கப்படவுள்ள பயனாளிகள் வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் அரச உத்தியோத்தர்களால் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

புதிய வீடமைப்புத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு அடுத்த மாதம் முதலாவது வாரத்தில் வவுனியாவில் நடைபெறவுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மறு அறிவித்தல் வரை மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

மறு அறிவித்தல் வரை மின்வெட்டு அமுல்படுத்தப் படமாட்டாது என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தை பரீட்சார்த்த ரீதியில் நேற்று அதிகாலை செயற்படுத்த முடிந்ததாக இலங்கை மின்சார சபையின் பிரதித் தலைவர் அனுர விஜேபால தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தேசிய மின் சக்தி கட்டமைப்புக்கு ஓரளவு மின்சாரத்தை இணைக்க முடிந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனைத் தவிர நீர்மின் உற்பத்தியில் ஓரளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விடயங்களைக் கவனத்திற் கொண்டு மின் வெட்டை தற்காலிகமாக நிறுத்துவதாக இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# யாழ்.போதனா வைத்தியசாலையின் 22 ஆம் விடுதிக்கு புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்திய சாலையில் 22ஆம் விடுதிக் கட்டடம் இடித்துப் புதிதாக அமைக்கப்படவுள்ளதாக யாழ். போதனாவைத்தியசாலை பதில் பணிப்பாளர் எஸ்.வி. பவானந்த ராஜா தெரிவித்துள்ளார்.

22ஆம் விடுதிக் கட்டடம் பெருமளவில் சேதமடைந்து காணப்படுவதனால் நோயாளிகளைத் தொடர்ந்து தங்க வைப்பது ஆபத்தான விடயமாகக் காணப்படுகிறது.

இவ் விடுதியிலுள்ள நோயாளர்களை வேறு விடுதியில் தங்க வைப்பதற் கான போதிய இடசவதிகள் இல்லையெனத் தெரிவித்துள்ள பதில் பணிப்பாளர் புதிய விடுதி அமைப்பதற்கான வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவித்தார். (53)

# பேருந்துகளின் அதிவேக ஓட்டம்; பொதுமக்கள் வீதிகளில் அச்சம்

(யாழ்ப்பாணம்)

வீதிகள் புனரமைப்பு நடைபெறும் இடங்களைக் கவனத்தில் கொள்ளாது அதிவேகத்துடன் செல்லும் வாகனங்களைக் குறித்து பாதசாரிகள் மற்றும் பொதுமக்கள் அச்சம் கொள்வதாகத் தெரியவருகிறது.

குறிப்பாக சிற்றூர்தி சேவையில் ஈடுபடும் பேருந்துகள், அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றிக்கொண்டு புனரமைப்பு நடைபெறும் ஒரு பக்க வழிப்பாதையிலும், ஒன்றை ஒன்று முந்தும் நிலையில் போட்டி போட்டு விரைந்து ஓடுவதையும் குறித்து இதுவரை எவரும் கவனத்திற் கொள்ளாதிருப்பதாகத் தெரியவருகிறது.

கிராமப்புறங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு காலை வேளைகளிலும், பின்பு யாழ்ப்பாணத்திலிருந்து மாலை வேளை கிராமப்புறங்களுக்குச் செல்லும் சிற்றூர்திகளே அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிய நிலையில், இவ்வாறு பொறுப்பற்று நடப்பதாக பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் பொதுமக்கள் மற்றும் பாதசாரிகளின் உயிர்ப்பாதுகாப்பை கவனத்திற்கொண்டு உரிய செயற்பாட்டை முன்னெடுக்க வரவேண்டுமென சமூக நலன் விரும்பிகள் கேட்டுக்கொள்கின்றனர். (138)

# ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு எந்தவொரு தேவைப்பாடும் இல்லை

(கொழும்பு)

தமக்கு ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை தோற்றுவிப்பதற்கு எந்தவொரு தேவைப்பாடும் இல்லை என்று ஹிருனிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

தாம் இலங்கை பொதுஜன கட்சியின் உறுப்பினர் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி என்ற வகையிலும் தமக்கு எதிரணியை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை.

எதிரணியை உருவாக்கும் தேவை இல்லாத அதேவேளை, எதிர்க்கட்சியிலும் இணைவதற்கு தாம் எதிர்பார்க்கவில்லை.

குறிப்பாக சீர்குலைந்துள்ள எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்வதற்கு தமக்கு எந்தவொரு முக்கிய தேவைப்பாடும் இல்லை என்றார்.

ஹிருனிகா பிரேமசந்திர ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணையப் போவதாக முன்னாள் அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார அண்மையில் தெரிவித்திருந்தார்.

# கலைமாணிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மிகவிரைவில் நடைபெறவிருக்கும் கலைமாணி பகுதி -i மற்றும் கலைமாணி பகுதி - ii ஆகிய பரீட்சைகளுக்கு இதுவரை விண்ணப்பிக்காத, மாணவர்களின் நன்மை கருதி மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 14.09.2012(வெள்ளிக்கிழமை) வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை வெளிவாரிப் பரீட்சைப் பிரிவுடன் தொடர்பு கொண்டு 'அறிந்து கொள்ளலாம் என யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு இணைப்பாளர் ந.சிவராஜா அறிவித்துள்ளார்.



காற்று வீசும் கோலம் மாறியதன் காரணமாக நாட்டின் பல மாவட்டங்களில் நேற்று பலத்த மழை பெய்துள்ளது. மேல், மத்திய, சப்ரகமுவ, கிழக்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறைப் பகுதிகளிலும் மேலும் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அடிப்படை வசதிகள் இல்லாத ஆனைவிழுந்தான் பாடசாலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஆனைவிழுந்தான் குளம் அ.த.க.பாடசாலை அடிப்படைவசதிகளற்ற நிலையில் இயங்கி வருவதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

ஆனைவிழுந்தான் குளம், ஐயனார்புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். தரம் 1-5 வரையான இந்தப் பாடசாலை மாணவர்கள் தற்போது குடிநீருக்குக் கூட அருகிலுள்ள ஆலயக்கிணற்றைப் பயன்படுத்தி வருவதாகவும் பாடசாலைக் கிணறு பாவிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனை விடவும் மாணவர்களுக்குப் போதிய தளபாட வசதிகளும் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான சூழல் என்பனவும் இதுவரை இப்பாடசாலையில் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஆசிரியர் பற்றாக்குறை இந்த பாடசாலையில் நிலவி வருவதால் தற்போது 2 வகுப்புக்களை ஒரு ஆசிரியர் வழி நடத்துவதாகவும் ஆங்கிலப் பாடத்திற்கான ஆசிரியர் இப்பாடசாலையில் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்தங்கிய கிராமத்தில் இருக்கும் இப்பாடசாலைக்கு வரும் மாணவர்கள் வறுமைக் கோட்டின் கீழான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் 90 வீதமான மாணவர்கள் சப்பாத்துக்கள் இன்றி இப்பாடசாலைக்கு வருவதாகவும தெரிவிக்கப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கூட இம் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்டோர் இந்தப் பாடசாலையின் நலன் கருதிய அபிவிருத்தி திட்டத்தில் மிகவிரைவாகச் செயற்பட வேண்டும் என மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (28)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper

**விஞ்ஞானம் (I-II)**

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (B.sc)

01. கலப்புன்னங்கத்திற்கும் அதன் தொழிலுக்கும் உள்ள தொடர்பை சரியாகக் காட்டுவது
   1) இழைமணி - பதார்த்தங்களைக் கடத்தல்
   2) கொல்கியுடல் - சுவாசம்
   3) புன்வெற்றிடம் - உணவைச் சேமித்தல்
   4) றைபோசோம் - புரதத்தை உற்பத்தி செய்தல்

02. மியூக்கோ பொலிபெப்ரைப், கைற்றின் போன்றவற்றால் ஆக்கப்பட்ட கலச்சுவர் கொண்ட நுண்ணங்கிகள் முறையே
   1) வைரஸ், பக்றீரியா  2) பங்கசு, அல்கா
   3) பக்றீரியா, பங்கசு  4) வைரஸ், அல்கா

03. தாவரவேரின் செயன்முறையாக அமையாதது
   1) நீரை அகத்துறிஞ்சல்
   2) சுவாசத்தை மேற்கொள்ளல்
   3) உணவைச் சேமித்தல்
   4) ஒளித்தொகுப்பை மேற்கொள்ளல்

04. பின்வருவனவற்றுள் எக்குருதிக் கலனில் குளுக்கோசின் செறிவு அதிகமாகக் காணப்படும்?
   1) ஈரல்வாயினாளம்  2) ஈரல்நாடி
   3) சிறுநீரக நாடி  4) சிறுநீரக நாளம்

05. வெளிச்சுவாசத்தின்போது
   1) பிரிமென்தகடு மேல்நோக்கி அசையும்
   2) பழுவிடைத்தசை மேல்நோக்கியும் வெளிநோக்கியும் அசையும்
   3) பிரிமென்தகடு கீழ்நோக்கி அசையும்
   4) பழுவிடைத்தசை மேல்நோக்கியும் பிரிமென்றகடு கீழ்நோக்கியும் அசையும்

06. B குருதியினம் உடையவர் பின்வரும் எக்குருதியினமுடையவர்களுக்கு குருதியை வழங்கலாம்?
   1) $B^+, B^-, O^+, O^-$ மட்டும்
   2) $A^+, A^-, AB^+, AB^-$ மட்டும்
   3) $B^-, B^+, AB^+, AB^-$ மட்டும்
   4) $B^-, O^-$ மட்டும்

07. மனித சிறுநீரில் அதிக சதவீதத்தில் காணப்படும் கூறு
   1) யூரியா  2) நீர்
   3) அமோனியா  4) உப்புக்கள்

08. பித்தம் சுரக்கப்படுவது
   1) சிறுநீரகம்  2) பித்தப்பை
   3) ஈரல்  4) பித்தக்கான்

09. பின்வருவனவற்றில் எது இறந்த பகுதியாலானது?
   1) கலமென்சவ்வு  2) கலச்சுவர்
   3) கொல்கியுடல்  4) றைபோசோம்

10. இதயத்திற்கு குருதியை வழங்கும் நாடி
   1) ஈரல்நாடி  2) காறை என்பு கீழ்நாடி
   3) பொதுசிரசு நாடி  4) முடியுரு நாடி


11. பாற்கலனினால் உறிஞ்சப்படுவது
   1) அமினோ அமிலமும் குளுக்கோசும்
   2) கொழுப்பமிலமும் கிளிசரோலும்
   3) கொழும்பமிலமும் குளுக்கோசும்
   4) அமினோ அமிலமும் கிளிசரோலும்


12. சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்ட ஒருவருக்கு கழிவகற்றல் முறை எவ்வாறு மேற்கொள்ளப்படும்?
   1) நுகைப்பு மூலம்
   2) வடிகட்டல் மூலம்
   3) செயற்கை சிறுநீரக இணைப்பு மூலம்
   4) ஓமோன்களை பயன்படுத்துவதன் மூலம்

13. 95% (V/V) எதனோல் கரைசலில் உள்ள கரைப்பான், கரையம் என்பவற்றின் கனவளவுகள் முறையே

| | கரைப்பான் | கரையம் |
|---|---|---|
| 1) | 95 $cm^3$ - நீர் | 5 $cm^3$ - எதனோல் |
| 2) | 95 $cm^3$ - எதனோல் | 5 $cm^3$ - நீர் |
| 3) | 5 $cm^3$ - எதனோல் | 95 $cm^3$ - நீர் |
| 4) | 5 $cm^3$ - நீர் | 95 $cm^3$ - எதனோல் |

14. படத்தில் காட்டியவாறு வளி அடைக்கப்பட்ட பலூன் நீரினுள் அமிழ்த்தப்பட்டு, பின் குளிர்நீர் சீராகச் சேர்க்கப்பட்டது. வெப்பநிலையுடன் (T) பலூனின் கனவளவு (V) மாறுபடும் முறையை வரைபாக்கும்போது கிடைக்கும் சரியான வரைபு?






15. அமிலமாக்கப்பட்ட நீரினை மின்பகுக்கும்போது நடைபெறுவன சம்பந்தமான பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்று எது?
   1) அனோட்டில் ஒட்சிசன் வாயு வெளிவரும்
   2) கதோட்டில் ஐதரசன் வாயு வெளிவரும்
   3) இங்கு உருவாகும் $H_2 : O_2$ கனவளவு விகிதம் 2:1 ஆக இருக்கும்
   4) $H^+$ அனோட்டை நோக்கியும் $OH^-$ கதோட்டை நோக்கியும் கவரப்படும்.

16. ஊதுலையினைப் பயன்படுத்தி இரும்புத் தாதுவான மக்னரைற் ($Fe_3O_4$) ஆனது காபனோர் ஒட்சைட்டால் (CO) தாழ்த்தப்படுவதற்கான தாக்கம் கீழே உள்ளது.

$Fe_3O_{4(s)} + XCO_{(g)}$ - $YFe_{(2)} + ZCO_{2(g)}$

இங்கு X,T,Z என்பன குறிக்கும் பெறுமானங்கள் முறையே
   1) 4,3,4  2) 2,3,2  3) 4,3,2  4) 3,3,4

17. X எனும் மூலக சல்பேற்றின் சூத்திரம் $X_2SO_4$ ஆகும். X இன் பொஸ்பேற்றின் சூத்திரம் யாது?
   1) $XPO_4$  2) $X_2PO_4$
   3) $X_3(PO_4)_2$  4) $X_3PO_4$

18. $^{35}_{17}X$ எனும் மூலகம் பற்றியதில் தவறானது?
   1) அணு எண் - 17  2) இலத்திரன் நிலை - 2,8,7
   3) கூட்டம் - VII  4) ஆவர்த்தனம் - 4

19. சிறிய சோடியம் துண்டு (Na) வளியில் உள்ளபோது நடைபெறும் தாக்கங்களில் தவறானது
   1) $4(Na(s) + O_{2(g)} \rightarrow 2Na_2O_{(s)}$
   2) $Na_2O(s) + H_2O(g) \rightarrow 2\,NaOH_{(ag)}$
   3) $NaOH(ag) + CO_{2(g)} \rightarrow Na_2CO_{3(s)} + H_2O(e)$
   4) $6Na_{(s)} + N_{2(g)} \rightarrow 2Na_3N_{(s)}$


20. சீமெந்து உற்பத்தியில் CaO ஆனது $S, O_2, Al_2O_3$ என்பவற்றுடன் தாக்கி கிளிங்கர் உருவாக்கப்படும். கிளிங்கரில் பின்வரும் எவ்வகை சேர்வை காணப்படாது
   1) CS  2) $C_2S$
   3) $C_3S$  4) $C_3A$

21. ஆய்வுகூடத்தில் $KMnO_4$ கரைசல் ஒன்று தயாரிக்கப்பட்டது. இதன் சுட்டித் துண்டில் காணப்படக்கூடிய தகவல் பின்வருவனவற்றுள் எது?
   1) 0.05mol $dm^{-3}$ $KMnO_4$ கரைசல்
      தயார் செய்யப்பட்ட திகதி : 2012.03.13
   2) 0.05mol $m^{-3}$ $KMnO_4$ கரைசல்
      தயார் செய்த
      திகதி : 2012.03.13
   3) $KMnO_4$ -10 g
      நீர் - 100 $cm^3$
      தயார் செய்த திகதி : 2012.03.12
   4) 0.05 ppm $KMnO_4$ கரைசல்
      தயார் செய்த
      திகதி : 2012.03.13

22. 0.05 mol NaOH ஆனது 500 ml NaOH கரைசலில் உள்ளது. இதன் செறிவு ppm இல் (parts per million) யாது?
   (1 ppm + 1 $mgdm^{-3}$) (Na =23, O =16, H=1)
   1) 400 ppm  2) 4000 ppm
   3) 40 ppm  3) 4 ppm

23. இலங்கையிலே புல்மோட்டையில் இல்மனைற் எனும் கனியம் காணப்படுகின்றது. இதிலே காணப்படக்கூடிய முக்கியமான உலோகம் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
   1) மக்னீசியம்  2) கல்சியம்
   3) தைத்தேனியம்  4) அலுமினியம்


24. M எனும் மூலகமானது உருவாக்கும் இரு மூலக்கூறுகள் தரப்பட்டுள்ளது.




M ஆக இருக்கக்கூடிய மூலகம் பின்வருவனவற்றுள் எது?


1) Na 2) S 3) C 4) N

25. அதிரி ஒன்றினால் உருவாக்கப்பட்ட அலை ஒன்றின் அமைப்பு தரப்பட்டுள்ளது. இவ்வகை அலைக்கு உதாரணமாக அமையாதது?




1) நீர்மேற்பரப்பு அலை 2) வளியில் ஒலி அலை
3) மின்காந்த அலை 4) சிலிங்கியில் உருவாகும் குறுக்கலை

26. வளியிலிருந்து (a) கண்ணாடியினுள் (g) ஒளி செல்வதை படம் காட்டுகின்றது. வளிக்கும் கண்ணாடிக்கும் இடையிலான முறிவுச்சுட்டி (ang) பின்வருவனவற்றுள் எது?





1) $ang = \frac{Sin\ 68^0}{Sin\ 30^0}$ 2) $ang\ \frac{Sin\ 30^0}{Sin\ 68^0}$
3) $ang = Sin\ 68^0 - Sin\ 30^0$
4) $ang = Sin\ 68^0 - Sin\ 30^0$


27. பின்வரும் ஒளிக்கதிர் படங்களில் தவறானது எது?





28. மாணவன் ஒருவன் ஒளி உணர் தடையை (LDR) பயன்படுத்தி அமைத்த ஒழுங்கமைப்பு தரப்பட்டுள்ளது. இம் மின்குமிழ் பகலில் ஒளிர மாட்டாது எனின், இங்கு மின்னோட்டப் பாதை யாதாக இருக்கும்?




1) A→ B→ C→ D→ E→ F→ G→ I
2) A→ B→ C→ D→ H→ G→ I
3) A→ B→ E→ F→ G→ I
4) A→ B→ C→D→ E→ F→ G→ I




29. தரப்பட்ட மின்சுற்று எத்தருக்கப்படலையைக் காட்டும்




1) AND படலை
2) OR படலை
3) NOT படலை
4) NAND படலை

30. தரப்பட்ட மின்சுற்றில் ஒளிரும் LED கள் எவை?
1) A, B மட்டும் 2) B, C மட்டும்
3) A, C மட்டும் 4) A மட்டும்


31. தொகையிடும் சுற்றில் (IC) அடங்கும் கூறுகள் அல்லாதது எது?
1) திரான்சிஸ்ரர் 2) தடையி
3) இருவாயி 4) மின்மாற்றி

32. 2K Ω தடையினூடு 3m A மின்னோட்டம் 10 நிமிட நேரம் செல்லும்போது செலவாகும் மின்சக்தி யாது?
1) 10.8 J 2) 108 J
3) 1080 J 4) 10800 J

33. கப்பலில் இருந்து சோனர் கருவியின் மூலம் பிறப்பிக்கப்பட்ட கழியொலியின் தெறிப்பு ஒலி 0.4 செக்கனில் பின் உணரப்பட்டதாயின் கடல்மட்டத்திலிருந்து அடித்தள ஆழம் யாது? (நீரில் ஒலியின் வேகம் $1400ms^{-1}$)
1) 560 m 2) 280 m 3) 140 m 4) 420 m

34. வங்கிகளில் போலி நாணயத்தாளைக் கண்டறிய பயன்படும் மின்காந்த அலை
1) கழியூதாக் கதிர் 2) X கதிர்
3) செங்கீழ் கதிர் 4) நுண் அலைகள்

35. புவிக்கம்பியில் 7/0.67 எனக் குறியீடு இடப்பட்டிருந்தது. இதன் கருத்தாக அமைவது?



ப, க, சி

1) 7 வடம் உள்ளது. ஒன்றின் குறுக்குவெட்டுப்பரப்பு $0.67mm^2$ ஆகும்.
2) 7 கம்பிகள் உள்ளது. ஒன்றின் குறுக்குவெட்டுப்பரப்பு $0.67mm^2$ ஆகும்.
3) 7 கம்பிகள் உள்ளது. வடத்தின் குறுக்குவெட்டுப்பரப்பு $0.67mm^2$ ஆகும்.
4) 7 கம்பிகள் உள்ளது. ஒர கம்பியின் விட்டம் 0.67 mm ஆகும்.

36. காட்டப்பட்ட தடையின் நிறப்பரிபாடை பச்சை, கபிலம், சிவப்பு எனின் அதன் தடைப்பெறுமானம் எவ்வளவு? (பச்சை, - 5 கபிலம் - 1 சிவப்பு -2)
1) 5100 Ω 2) 521 Ω 3) 510 Ω 4) 520 Ω

37. தற்போது இலங்கையிலே டெங்கு நோய் குடம்பிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் பக்ரீரியா வகை?
1) BTI 2) Acetobactor
3) Rhizobium 4) Steptococus

38. காடழிப்பினால் ஏற்படும் நேரடிப்பாதிப்பு அல்லாதது
1) மழைவீழ்ச்சி குன்றல்
2) வனவிலங்குகளின் வாழிடங்கள் இழக்கப்படல்
3) சூழல் வெப்பநிலை அதிகரித்தல்
4) அமிலமழை ஏற்படல்

39. பீடைநாசினிகளின் பயன்பாட்டினால் ஆசனிக் (AS) மூலகம், உணவினூடாக எமது உடலை வந்தடைகின்றது. இதனால் பாதிப்படையும் உறுப்பு?
1) ஈரல் 2) சிறுநீரகம் 3) இதயம் 4) சிறுகுடல்


40. e - கழிவு (e-waste) தற்கால உலகு சந்திக்கும் புதிய சூழல் பிரச்சினைகளில் ஒன்றாகும். பயன்படுத்தப்பட்ட மின், இலத்திரனியல் உபகரணங்கள் இத்தொகுதியினுள் அடங்குகின்றது. இதில் குறைந்தளவு பங்களிப்புச் செய்வது ?
1) தொடர்ந்து புது மின் உபகரணங்கள் சந்தைக்கு வருதல்
2) மின், இலத்திரனியல் உபகரணங்களின் பயன்பாடு அதிகரித்தல்.
3) சுனாமி, வெள்ளம் போன்ற இயற்கை அழிவுகளினால் இவை பாரிய பிரதேசங்களுக்குப் பரவல்
4) இலத்திரனியல், மின் உபகரணங்களால் அங்கிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கூறுகள் பெருமளவில் காணப்படல்.

## பகுதி II
## (அமைப்புக் கட்டுரை - A)

**கவனிக்க**

- இப்பகுதி உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகியவற்றை உள்ளடக்கி 4 வினாக்களை கொண்டுள்ளது.

(1) மாணவன் ஒருவன் புத்தாக்கக் கண்காட்சி ஒன்றிலே அமைத்த 'தன்னியக்க நீர் வழங்கல் தொகுதி' எனும் ஆக்கமானது தரப்பட்டுள்ளது.




- ஈரமான நிலை குறைவடையும்போது தாவரத்திற்கு நீர் கிடைக்கக்கூடிய வாறு தன்னியக்க நீர் வழங்கல் தொகுதியானது அமைக்கப்பட்டது.

- இங்கு ஈரநிலை குறைவடையும்போது உணர்திறன் செப்புத்தகடு மூலம் உணரப்பட்டு சுற்று B யிலுள்ள கதவம் AND கதவத்திற்கு 1 எனும் பெய்ப்பை வழங்கும். இதன்போது செறிவான ஒளிச்செறிவு இருத்தல் கூடாது. இதன்போது A தொழிற்பட்டு NOT கதவம் மூலம் AND கதவத்திற்கு 1 எனும் பெய்ப்பை வழங்கும். இதனால் C எனும் இடைநடுச்சுற்றை இயங்கச் செய்து நீர்க்குழாய் வாயில் திறக்கப்பட்டு செடிக்குத் தேவையான நீர் கிடைக்கும்.

A) i) தாவர ஒளித்தொகுப்புக்கு அவசியமான காரணிகள் எவை?
i) ................................ ii) ................................
iii) ................................ iv) ................................


ii) ஒளித்தொகுப்பு சமன்பாட்டை தருக.
................................................................................

iii) தாவரங்களில் நீர் கனியுப்பைக் கடத்தும் இழையம் எது?
................................................................................

iv) அவ் இழையம் எப்பிரதான தாவர இழைய வகையினுள் உள்ளடங்கும்?
................................................................................

(தொடரும்.....)

# கூடங்குளத்தில் மீண்டும் பதற்றம்; ஆயிரக்கணக்கான பொலிஸார் குவிப்பு




கூடங்குளம் அணு மின் நிலையத்தை போராட்டக் குழுவினர் முற்றுகையிடுவதாக தகவல் பரவியதால் அணு மின் நிலையத்தை சுற்றியும், கடலோர கிராமங்களிலும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். கூடங்குளம் அணு மின் நிலையத்தின் முதல் அணு உலையில் எரிபொருள் நிரப்ப கடந்த மாதம் 10ஆம் திகதி இந்திய அணுசக்தி ஒழுங்கு முறை வாரியம் அனுமதி அளித்தது.

இதைத் தொடர்ந்து ஓரிரு நாட்களில் எரிபொருள் நிரப்பும் பணி தொடங்க உள்ளது. இந்நிலையில் எரிபொருள் நிரப்புவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டக் குழுவினர் கூடங்குளம் அணு மின் நிலையத்தை முற்றுகையிட திட்டமிட்டுள்ளதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல்கள் கிடைத்தன. உடனடியாக கூடங்குளம் அணு மின் நிலையம் முன்பு ஆயிரக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டனர். இவர்களுடன் கோவையில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ள 3 கம்பெனி மத்திய அதிரடிப் படையினர் கூடங்குளம் அணு மின் நிலையம் முன்பு குவிக்கப்பட்டுள்ளனர்.

இடிந்தகரைக்கு அருகேயுள்ள தோமஸ் மண்டபம் விலக்குப் பகுதியில் பஜ்ரோ வாகனங்களும், கண்ணீர்ப் புகைக் குண்டு வீசும் வாகனங்களும் நிறுத்தப்பட்டுள்ளன. நெல்லை எஸ்.பி. விஜயேந்திர பிதரி, கூடுதல் எஸ்.பி. மகேந்திரன் ஆகியோர் தலைமையில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் கடற்கரை கிராமங்களில் பதற்றம் நிலவுகிறது.

இதையடுத்து நெல்லை மாவட்ட கடலோர கிராமங்களுக்கு பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. நவ்வலடி முதல் செட்டிகுளம் வரையும், இராதாபுரம், இடிந்தகரை வழித்தடத்திலும் பொலிஸார் வாகனங்கள் எதையும் அனுமதிக்கவில்லை. மீனவர்களும் நேற்று முன்தினம் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை. இடிந்தகரை கிராமத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆண்கள் மற்றும் பெண்கள் கையில் கட்டைகளுடன் நேற்று முன்தினம் மாலை தோமஸ் மண்டபம் பகுதிக்கு திரண்டு வந்தனர். பொலிஸார் அதிகமாக குவிக்கப்பட்டிருந்த தகவல் அறிந்ததால் மீண்டும் பொதுமக்கள் இடிந்தகரை திரும்பினர்




# அன்னா ஹசாரேயின் 6 அம்ச திட்டங்கள்

(மும்பை)

அரசியல் கட்சி ஆரம்பிக்கும் திட்டத்தை கைவிட்ட அன்னாஹசாரே அதற்கு பதிலாக 6 அம்ச திட்டத்தை அறிவித்துள்ளார். மேலும் இதனை முழுவீச்சில் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாகவும் அறிவித்துள்ளார். இதன்படி தேர்தலில் நேர்மையானவர்களை தேர்ந்தெடுக்கும் பணியில் இளைஞர்கள் முன்வர வேண்டும். தேர்தலின் போது 90 சதவீத வாக்குகள் பதிவு பெறச்செய்ய வேண்டும். இதற்கான முயற்சியில் இறங்கப் போவதாக கூறிய அவர், அரசியல் கட்சி தொடங்கும் எண்ணம் இல்லை என கூறினார். மேலும் தேர்தலில் நேர்மையானவர்களை தேர்ந்தெடுத்தல், கிராம பஞ்சாயத்துகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல், அரச வேலைகளில் ஏற்படும் தாமதங்களை தவிர்க்க முயற்சி செய்தல், பொலிஸாரை லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா அமைப்பில் கொண்டு வருதல், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை நிராகரிக்கும் உரிமை உட்பட 6 அம்ச திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# கட்சியின் தலைமைக்கு ஆசைப்படமாட்டேன்

## - எடியூரப்பா -



(பெங்களூர்)

கர்நாடகாவில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியினரிடையே பிளவு ஏற்பட்டு இரு பிரிவாகச் செயற்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் கர்நாடக முதலமைச்சராக இருந்து பதவியிறக்கம் செய்யப்பட்ட எடியூரப்பா சமீபத்தில் டில்லி சென்று வந்தபின். செய்தியாளர்களை சந்தித்து இது குறித்து கூறியதாவது,

டில்லிக்கு சென்ற நான், கர்நாடக பாரதீய ஜனதாவில் எனக்கு தலைமைப் பொறுப்பு வேண்டி யாரையும் வற்புறுத்தவில்லை. மேலும் எனது ஆதரவாளர்களுக்கு எந்தப் பதவி வேண்டியும் கட்சியின் மேலிடத்துக்கு நெருக்கடி கொடுக்கவில்லை.

கட்சியின் ஒரு சாதாரண தொண்டனாக செயற்பட விரும்பும் நான், இந்த மாதம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்க்க உள்ளேன் என்று அவர் கூறினார்.

## - இலங்கை விவகாரம் -

# மத்திய அரசின் கொள்கைகளில் தமிழக அரசு தலையிடக்கூடாது

## - சுப்ரமணியம் சுவாமி -



இலங்கை தொடர்பான மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளில் தமிழக அரசாங்கம் தலையீடு செய்யக் கூடாது என இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார். தமிழகத்தில் வாழ்ந்து வரும் சிங்கள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் குறுக்கீடு செய்யக் கூடாது என மத்திய அரசாங்கம், தமிழக அரசாங்கத்திற்கு அறிவுறுத்தல் விடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். மத்திய அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களை மீறிச் செயற்பட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இத்திய அரசியல் சாசனத்தின் 256ஆம் சரத்தின் அடிப்படையில் தமிழக அரசாங்கம், நாட்டின் வெளியுறவுக் கொள்கைகளில் தலையீடு செய்யக் கூடாது என வலியுறுத்தியுள்ளார்.

தமிழக முதல்வர் மத்திய அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களை ஏற்றுக் கொள்ளத் தவறினால் ஜனாதிபதி ஆட்சியின் கீழ் தமிழக மாநி லம் ஆளப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இந்திய விஜயத்தின் போது வை.கோ ஏதேனும் போராட்டங்களை நடத்தினால் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சுப்ரமணியம் சுவாமி கோரிக்கை விடுத்துள்ளார்.



உத்தர பிரதேச மாநிலம் மிர்சாபூரில் நடைபெற்ற பெண் கல்வி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இந்தி நடிகை வித்யா பாலன்.

வாழ்க வளமுடன்
தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்
பெயர் : ம. சாகித்தியா
முகவரி: 64, ஜெயபுரம், கிளிநொச்சி.
அகவை 6இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



வாழ்க வளமுடன்
தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்
பெயர் : ச. அஜீஸ்னா
முகவரி: சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.
அகவை 2இல்



# கலாமுக்கு 'புரஸ்கார்' விருது

அறிவியல் ஆராய்ச்சிப் பங்களிப்புக் கான விருது இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமுக்கு வழங்கப்பட்டது. கேரள மாநிலம் கொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் வைத்து கலாமுக்கு சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் 2012 என்ற விருது வழங்கப்பட்டது.

அப்துல் கலாமுக்கு இந்த விருதை கார்டினல் மார் ஜார்ஜ் ஆலன் செரி வழங்கினார். அறிவியல் ஆராய்ச்சிக்கான பங்களிப்பு மற்றும் தனது அறிவியல் அனுபவத்தை பொதுமக்கள் நலனுக்காக பயன்படுத்தி வருவது ஆகியவற்றுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

ரூபா 2,22,222 ரொக்கம் அடங்கிய இந்த விருதைப் பெறும் முதல் அறிஞர் கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக். அணுஉலைகளுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு




பாகிஸ்தானில் உள்ள அணு உலைகளுக்கு தலிபான்கள் மிரட்டல் விடுத்ததையடுத்து, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள மிகப் பெரிய அணு உலையான டேரா காஸி கான் அணு உலைக்கு பாதுகாப்பு ஏற்பாடு பலப்படுத்தப்பட்டுள்ளது. பஞ்சாப் மாகாணத்தில் உள்ள 3 இராணுவப் பிரிவைச் சேர்ந்தோர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மாதத்தின் முதல் வாரத்தில் டேரா காஸி கான் பகுதியில் பொலிஸார் நடத்திய அதிரடித் தாக்குதலில் முக்கிய தீவிரவாதி காய்ஸ்ரனி உள்ளிட்ட 8பேர் கொல்லப்பட்டனர். மேலும் அப் பகுதியில் இருந்த தலிபான் தீவிரவாதிகளையும் விரட்டியடித்தனர்.

காய்ஸ்ரனி கொல்லப்பட்டது தலிபான் இயக்கத்துக்கும் பெரும பின்னடைவாகக் கருதப்பட்டது. பின்னர் கடந்த மாதம் 16ஆம் திகதி கம்ரா விமானப் படைத்தளத்தை தலிபான் தீவிரவாதிகள் தாக்கினர். இதைத் தொடர்ந்து, டேரா காஸி கான் பகுதியில் உள்ள அணு உலை தான் எங்கள் அடுத்த இலக்கு என்றும் மிரட்டல் விடுத்திருந்தனர்.

தலிபான்களின் இந்த மிரட்டல் வெறும் மிரட்டலாகக் கருதப்படவில்லை. 80 சதவீதம் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதாகக் கருதப்பட்டது.

தலிபான் தீவிரவாதிகளின் தொலைபேசி உரையாடலில் அணு உலை தாக்குதல் குறித்து பேசியது பதிவாகியுள்ளது. தற்கொலைப்படை தீவிரவாதிகள், வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார்களுடன் டேரா காஸி கான் பகுதிக்குள் நுழைந்து அணு உலை மீது தாக்குதல் நிகழ்த்த தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை தீவிரவாதிகள் எந்த நேரத்திலும் நடத்தலாம் என்று பாகிஸ்தான் உளவு அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளதாக எக்ஸ்பிரஸ் டிரிப்யூன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அணு உலையைச் சுற்றிலும் பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் பஞ்சாப் மற்றும் பலுசிஸ்தான் மாகாண எல்லைகளுக்கு இடைப்பட்ட பகுதியிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

டேரா காஸி கான் அணு உலையை தாக்கப் போவதாக தலிபான் தீவிரவாதிகள் முதல் முறையாக மிரட்டல் விடுத்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தலிபான்களின் இந்த மிரட்டல் பிராந்திய பாதுகாப் புக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை என அரசியல் கட்சியினர் கருத்து தெரிவித்துள்ளனர்.

# அகதிகள் படகு பாறையில் மோதியது; சிரிய, ஈராக்கியர் 58 பேர் பலி





சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்து வருவதால், மக்கள் அகதிகளாக வெளியேறி வருகின்றனர்.

துருக்கியில் மட்டும் சுமார் 80,000 பேர் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். இந்நிலையில் கடந்த புதன்கிழமை ஒரு மீன்பிடிப் படகில் சிரியா, ஈராக் நாடுகளைச்சேர்ந்தவர்கள் அகதிகளாக ஐரோபபிய நாடுகளுக்கு புறப்பட்டனர். அந்தப் படகு கடலில் பாறையில் மோதி கவிழ்ந்தது. இதில் 58 பேர் கடலில் மூழ்கி பலியாகினர் என்று துருக்கியிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உலகச் செய்திகள்

# எந்தவொருநாடும் ஈரான்மீது தாக்குதல் நடத்தக் கூடாது

## – ரஷ்யா பகிரங்க எச்சரிக்கை



ஈரான் மீது எந்தவொரு நாடும தாக்குதல் நடத்தக் கூடாதென ரஷ்யா எச்சரிக்கைவிடுத்துள்ளது.

ஈரான் இரகசியமாக அணு உலைகளை தயாரிப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட மேற்கத்திய நாடுகள் குற்றம் சுமத்தி வருவதுடன், பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

ஆனால் இந்தக்குற்றச்சாட்டை மறுத்துள்ள ஈரான் அணு சக்தியை மின்சார உற்பத்தி போன்ற ஆக்கப்பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தி வருவதாகத் தெரி வித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச அணு சக்தி கழகத்தினர் பல்வேறு வகையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த பிரச்சினையை பேச்சு வார்த்தை மூலம் சுமுகமாகத் தீர்க்க அமெரிக்கா, ரஷ்யா உட்பட 6 நாட்டு தூதுவர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் ரஷ்ய வெளியுறவு துணை அமைச்சர் ரியாப்கோவ் இடம் பெற்றிருக்கிறார்.

இந்நிலையில் ஈரான் கடந்த சில மாதங்களாக அணு சக்தி பொருட்களை தீவிரமாகப் பயன்படுத்தி வருவதாக புதிய புகார் கூறப்பட்டது. எனவே இஸ்ரேல் இராணுவ நடவடிக்கை எடுத்து ஈரான் அணு உலைகளை அழிப்போம் என்று அடிக்கடி மிரட்டல் விடுத்து வருகிறது.

இதேவேளை ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்த கூடாது என்று ரஷ்யா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய வெளி விவகார துணை அமைச்சர் செர்கி ரியாப்கோவ் கூறுகையில், ஈரான் அணு குண்டு தயாரிப்பதற்கான அறிகுறிகள் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கு இராணுவ பயன்பாட்டிற்காக அணுசக்தி பொருட்கள் திருப்பி விடப்படவில்லை என்பதை சர்வதேச குழு அதிகாரபூர்வ மாக உறுதி செய்துள்ளது.

ஆதலால் இந்த அணு உலை பிரச்சினைக்காக ஈரான் மீது இஸ்ரேல் மற்றும் வேறு நாடுகள் தாக்குதல் எதையும் நடத்தக் கூடாது.

இராணுவ நடவடிக்கை விவேகமாக இருக்காது என எச்சரிக்கிறோம். அதை மீறி தாக்குதல் நடத்தினால் மத்திய கிழக்கு பகுதியில் பேரழிவை ஏற்படுத்தும். அந்தப் பகுதியின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன் பாதுகாப்பு, பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# பிரிட்டன் சுற்றுலாப் பயணிகள் பிரான்ஸில் சுட்டுக்கொலை

பிரான்ஸுக்கு சுற்றுலா சென்ற பிரிட்டனைச் சேர்ந்த குடும்பத்தினரின் கார் மீது, மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், நான்கு பேர் பலியாயினர். தாயின் சடலத்துக்கு அடியில் எட்டு மணி நேரம் தவித்த, நான்கு வயது பெண் குழந்தை உயிருடன் மீட்கப்பட்டார்.

பிரான்ஸ், ஆல்ப்ஸ் மலைப் பகுதிக்கு பிரிட்டனைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் சுற்றுலா சென்றுள்ளனர். அங்கு, ஆன்சி ஏரிக்கரையோரம் உள்ள கிராமத்தில், தங்கள் பிரிட்டன் பதிவு எண் கொண்ட காரில் சென்றபோது மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இதில், காரின் முன் இருக்கையில் அமர்ந்து காரை ஓட்டிச் சென்ற ஒரு ஆணும், பின் இருக்கையில் அமர்ந்திருந்த இரு பெண்களும் பலியாயினர். காரின் முன் சைக்கிளில் சென்ற ஒருவரும், இந்த துப்பாக்கிச் சூட்டில் பலியாகியுள்ளார்.

# அமெரிக்காவின் முன்னேற்றத்திற்கு ஒபாமாவை ஜனாதிபதியாக்குங்கள்

## – பில் கிளிண்டன் வேண்டுகோள்



அமெரிக்காவில் குடியரசுக் கட்சியினர் ஏற்படுத்திய குளறுபடிகளை முழுமையாகச் சரி செய்ய இன்னும் நான்கு ஆண்டுகள் தேவைப்படும். எனவே ஒபாமாவை மீண்டும் ஜனாதிபதியாக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக மிட்ரோம்னி போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சி சார்பில் ஒபாமா மீண்டும் களமிறங்குகிறார்.

ஒபாமாவை ஜனாதிபதி வேட்பாளராக அதிகாரப்பூர்வமாக தெரிவு செய்ய வடக்கு கரோலினாவில் உள்ள சார்லோட் நகரில் ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாடு நடந்தது. ஒபாமாவை மீண்டும் வேட்பாளராக்க மாநாட்டில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

முன்னதாக ஒபாமாவை முன்மொழிந்து முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் பேசுகையில், வெளித் தோற்றத்துக்கு குளிர்ச்சியாகவும், உள்ளுக்குள் அமெரிக்காவுக்காக பற்றி எரியும் மன ஓட்டமும் கொண்ட ஒருவர் தான் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக வேண்டும். புதுமை, படைப்புத் திறன், கல்வி மற்றும் ஒத்துழைப்புடன் கூடிய புதிய அமெரிக்க கனவு பொருளாதாரத்தை கட்டமைக்க தகுதி படைத்தவரே ஜனாதிபதி பதவியில் அமர வேண்டும்.

அந்த வகையில் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக ஒபாமாவே வர வேண்டும் என விரும்புகிறேன். ஒபாமா ஜனாதிபதியாக பதவியேற்ற போது அமெரிக்காவின் பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு நிலை போன்றவை மிக மோசமாக இருந்தன.

அந்த தருணத்தில் நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றிருந்தாலும், வேறு யார் வந்தாலும் உடனடியாக எந்த தீர்வையும் ஏற்படுத்தியிருக்க முடியாது.

நலிந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்கத் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் ஒபாமா மிகச் சரியாக மேற்கொண்டார்.

கடந்த ஆட்சியில் குடியரசுக் கட்சியினர் செய்து வைத்திருந்த குளறுபடிகளையும், சேதாரங்களையும் சரி செய்ய இன்னும் நான்கு ஆண்டுகள் தேவைப்படும்.

எனவே மீண்டும் ஒபாமாவை ஜனாதிபதியாக்கினால் அதற்கான பலனை மக்கள் நன்கு உணருவர் என்று தெரிவித்துள்ளார்.

# வாழ்க்கை வெறுப்பானதால் முதலைக்கு இரையாகிய பெண்



வாழ்க்கையில் விரக்தியடைந்த தாய்லாந்துப் பெண் ஒருவர், முதலைப் பண்ணையில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

தாய்லாந்தின் பாங்கொக் நகருக்கு புறநகரில் சமூத் பிரகார்ன் முதலைப் பண்ணை உள்ளது.

பாங்கொக் நகரைச் சேர்ந்த 36 வயது பெண் இந்த முதலைப் பண்ணையில் குதித்து முதலைக்கு இரையாகியுள்ளார்.

முதலைப் பண்ணை ஊழியர்களின் அஜாக்கிரதையால் தன் மனைவி முதலை பண்ணையில் தவறி விழுந்துள்ளார். எனவே பண்ணை நிர்வாகம் தகுந்த நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என அந்த பெண்ணின் கணவர் சுனாய் ஜிசாத்ரா தெரிவித்துள்ளார்.

ஆனால் பண்ணையில் உள்ள கண்காணிப்பு கமெராவில், அந்தப் பெண் தானாகவே குதித்து முதலை வாயில் சிக்கியுள்ளதாக படம் பதிவாகியுள்ளது.

தன் மனைவி பணப் பற்றாக்குறை காரணமாக வருத்தத்தில் இருந்தது உண்மை தான் என சுனாய் தெரிவித்துள்ளார்.

# தாதி மீது தாக்குதல் வெடித்தது போராட்டம்

## முடங்கியது வைத்தியசாலை

யாழ். போதனா வைத்தியசாலையின் பெண் தாதி உத்தியோத்தர்களின் பாதுகாப்பை வலியுறுத்தியும் அவர்களுக்கு பாதுகாப்பான விடுதி வசதி ஏற்படுத்தித் தரவும் வலியுறுத்தி யாழ். போதனா வைத்தியசாலையின் ஊழியர்கள் மற்றும் உத்தியோத்தர்கள் இணைந்து வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் முன்பாக நேற்றுக்காலை இருமணிநேர கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்திற்கு வெளியே ஆனைப்பந்திப் பகுதியில் தனியார் வீடு ஒன்றில் இயங்கி வரும் வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் மீது நேற்று அதிகாலை அந்த விடுதியினுள் நுழைந்த இனந்தெரியாத நபர் கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்குதல் நடத்தியதினால் அவர் காயமடைந்திருந்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்தே யாழ். போதனா வைத்தியசாலையின் ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தாக்குதல் நடைபெற்ற விடுதியில் சுமார் 20 முதல் 25 வரையான தாதியர்கள் தங்கியிருந்ததாகவும் தெரியவருகின்றது. ஏற்கனவே இந்த விடுதியில் இத்தகைய அச்சுறுத்தல் இருந்து வந்தமையும் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு தாதிய உத்தியோத்தர்களினால் தெரியப்படுத்தப்பட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.


இந்தச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் குறித்த தாதிய உத்தியோத்தரினால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

காயமடைந்த மினிமால் கொடையைச் சேர்ந்த ஏ.எஸ்.பெர்னாண்டோ (அஞ்சலி) என்ற தாதிய உத்தியோகத்தர் கையிலும் முகத்திலும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து நேற்று மு.ப. 10.00 மணியளவில் வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் முன்பாக ஒன்றுகூடிய வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் உத்தியோத்தர்கள் நடைபெற்ற சம்பவத்தைக் கண்டிக்கும் வகையிலான சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாதியர் பாதுகாப்பு கேள்விக்குறி, பலமுறை கோரியும் விடுதி வசதி ஏற்படுத்தித் தராதது ஏன்? போன்ற சுலோக வாசகங்கள் அடங்கிய அட்டைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

நண்பகல் 12.00 மணியுடன் நோயாளர்களது மேலதிக சிரமங்களைத் தவிர்க்கு முகமாகவும் வைத்தியசாலை நிர்வாகம், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினதும் உறுதிமொழியை அடுத்தும் வைத்தியசாலை ஊழியர்களும் உத்தியோத்தர்களும் தமது போராட்டத்தை நிறுத்தி கடமைக்குத் திரும்பினர். (பா,இ)



நேற்று இரவு 10.30 மணியளவில் வல்லிபுர ஆழ்வார்ஆலயத்தில் இடம்பெற்ற கிருஸ்ணஜெயந்தி நிகழ்வில் பொலிகண்டி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பக்தி வைராக்கியம் எனும் தலைப்பில் வில்லிசை நிகழ்வு வழங்கியபோது...

## இலங்கைப்...

விளையாடுவதற்கு அனுமதி வழங்கிய அதிகாரி ஒருவர் அவரது பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பஸ்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, பாதுகாப்புக் கருதி தமிழ் நாட்டிற்குச் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு தனது பிரஜைகளுக்கு இலங்கை அரசாங்கம் பயண எச்சரிக்கையை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி...

டிப்போச் சந்திக்கு அருகிலுள்ள கூட்டுறவாளர்மண்டபத்தில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் விசேட அபிவிருத்திக் குழுகூட்டமும் அவரது தலைமையில் இடம்பெறவுள்ளது. (29)

## வறிய...

அரச காணிகளில் வசித்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் வசிக்கின்ற மக்களின் காணிகள் நிலஅளவை மேற்கொள்ளப்பட்ட பின்னர் காணி ஆணையாளர் நாயகத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளன. காணி ஆணையாளரின் அனுமதி கிடைத்தவுடன் அவர்களுக்கான காணி உரிமங்கள் வழங்கப்படும் என்று கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

## கிழக்கில்....

நடத்துமாறு சம்பந்தன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடந்த புதன்கிழமை தொலைநகல் மூலம் அனுப்பிய கடிதத்தில் கோரியிருந்தார்.

அவர் தனது கடிதத்தின் பிரதி ஒன்றை தேர்தல் ஆணையாளருக்கும் அனுப்பி வைத்திருந்தார். அக்கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே தேர்தல் ஆணையாளர், சம்பந்தனுக்கு நேற்றுப் பிற்பகல் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

தேர்தல் ஆணையாளர் தனது பதில் கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

வாக்காளர்களை அச்சுறுத்துவது, வாக்காளர்கள் மீது செல்வாக்கு பிரயோகிப்பது, அரச சொத்துக்களை தவறாக துஷ்பிரயோகம் செய்வது போன்ற நீங்கள் குறிப்பிட்ட சட்டவிரோத செயல்பாடுகள் தொடர்பாக நானும் மாவட்டங்களில் உள்ள எனது பிரதி மற்றும் உதவி ஆணையாளார்களும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். வாக்களிப்பு ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு ஒழுங்கு பற்றியும் வாக்காளர்கள் நன்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அச்சமின்றி வாக்களிக்க செல்லலாம் என்றும் வாக்காளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

வாக்களிப்புக்கு முதல் நாளும் வாக்களிப்பு தினத்தன்றும் தேர்தல் சட்டங்களை மீறுவோர் மீதும் வன்செயல்களைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸார் மற்றும் அரச அதிகாரிகள் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் ஆணையாளர் சம்பந்தனுக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியை ஜனாதிபதியின் செயலாளருக்கும் அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில்....

வழங்கியதற்கமைவாக இரண்டு உழவு இயந்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், தண்ணீர்த் தாங்கி (பவுசர்) மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழ்ங்கியதை அடுத்து அவ்வுபகரணத் தொகுதிகளும் கொள்வனவு செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வளாகத்திலுள்ள மிதிவெடிகளை அகற்றுவது தொடர்பிலுள்ள இடர்பாடுகள் தொடர்பில் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் வளாகத்தினது சுத்தம் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு மாணவர்களை ஒருங்கிணைத்து இம்மாத இறுதியில் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் சிரமதானப் பணி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இதனிடையே பொறியியல் பீடத்தை தற்காலிகமாக இயங்கும் வகையில் கிளிநொச்சி புதுமுறிப்பிலுள்ள மகாதேவ ஆச்சிரமக் கட்டடத் தொகுதியையும் அவற்றின் வசதி வாய்ப்புக்களைக் கண்டறியும் பொருட்டு அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், யாழ். பல்கலைக் கழக விவசாய பீடாதிபதி கலாநிதி மிகுந்தன், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கந்தசாமி, வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, பதிவர்ளர் காண்டீபன், கிளிநொச்சி மாவட்ட ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

## கோப்பாயில்...

நேற்றைய யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்தார்.

மேலும், இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் பிரதேசசபை எதிர்க் கட்சி உறுப்பினர்களும் படையினருக்கு காணிகளை வழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்தாகவும் இந்தப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளில் குறிப்பிடப்பட்டிருப்பது தவறானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோப்பாயில் சிறைச்சாலை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட, முன்னர் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த காணி ஒன்று உட்பட, 550 பரப்புக் காணியை படை முகாம்கள் அமைப்பதற்காக படையினர் கோரியிருந்ததாகவும், இந்தக் காணிகளை அவர்களுக்கு வழங்குவதற்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சம்மதம் பெறப்பட்டுள்ளதாகவும் கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்ததாகப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும், இவ்வாறு காணிகளை வழங்குவதற்கான சம்மதம் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்டதாகக் கூறப்படுவது சரியானதல்ல என்று சுட்டிக்காட்டிய அவர், படையினரது காணிகள் தொடர்பான கோரிக்கை குறித்து காணி பயன்பாட்டுக் குழுக் கூட்டத்தில் முன்னதாக ஆராயப்பட்ட பின்னர், பிரதேச செயலாளர் என்ற வகையில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அது அறியத்தரப்பட்டதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து இந்த விடயம் மாவட்ட செயலகத்திடம் கையளிக்கப்பட்டு அங்கே ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்ட பின்னர் அமைச்சு மட்டத்திலேயே இதுதொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் பிரதேச செயலளர் தெரிவித்தார்.

இந்த நிலையில், ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே காணிகளை படையினரிடம் வழங்குவதற்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுவது சரியானதல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

படையினரது இந்தக் கோரிக்கை குறித்து எவருக்கும் ஆட்சேபம் இருப்பின் அதுபற்றி அறிந்து கொள்வதற்காகவே ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டதில் இந்த விடயம் அறியத்தரப்பட்டதாகக் கூறிய அவர், எவருக்கும் இந்த விடயத்தில் ஆட்சேபனை இருந்திருப்பின் அதை அந்தக் கூட்டத்திலேயே தெரிவித்திருக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு பெண்மணி குறிப்பிட்ட ஒரு காணி தொடர்பாக தமது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தார் எனவும், எனவே, இந்தக் காணி தொடர்பில் மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

காணிகளை படையினருக்கு வழங்குவது தொடர்பான விடயத்தில் பொதுமக்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்புக் காட்டப்பட்டதாக மற்றுமொரு யாழ்ப்பாணப் பத்திரிகையில் வெளியான செய்தியும் உண்மைக்குப் புறம்பானது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த மாதம் 30ம் திகதியே எழுத்து மூலம் அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்த அவர், எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக எவரும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வலிகாமம் கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பிரதேசத்தின் அபிவிருத்தி, உட்கட்டுமான வசதிகள், மருத்துவ வசதிகள், குடிநீர் வசதிகள் என்று பல்வேறு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், இந்த விடயங்கள் குறித்து முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட்டன.

இந்தப் பிரதேசத்தின் வீதிகளைப் புனரமைத்தல், சந்தைச் செயற்பாடுகளை மேம்படுத்தல், குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணல் என்பவற்றுடன், கழிவகற்றல் செயற்பாடுகளை சீராக்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்ட உரிய பணிப்புரைகள் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினால் வழங்கப்பட்டது.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம், கடற்றொழில், கால்நடை அபிவிருத்தி, மின்சாரம், வீடமைப்பு, வீதி அபிவிருத்தி, கூட்டுறவு, கைத்தொழில், சமுர்த்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இங்கே விரிவாக ஆராயப்பட்டது.

வாதரவத்தை பிரதேசம் மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக் காணப்படுவதுடன் குடிநீர், வீதி, போக்குவரத்து உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் சீர்செய்யப்படவில்லையென பொதுமக்கள் சுட்டிக் காட்டியதையடுத்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிரதேசத்தின் தேவைகள் தொடர்பான பகுப்பாய்வுக் கலந்துரையாடலை மேற்கொள்வது எனவும், மக்களது பிரச்சினைகளை இலகுவாக தீர்பதற்காகவும், ஏனைய விடயங்களை ஆராய்ந்து படிப்படியாக நிறைவு செய்யும் வகையிலும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடத்துவதெனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் கட்டடங்கள் மிகவும் பழமைவாய்ந்த கட்டடங்களாகக் காணப்படுவதுடன் இவற்றை புனரமைப்பு செய்ய பாரிய நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கட்டம் கட்டமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியினைம் பெற்று புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் தெரிவித்தார்.

இவ் அபிவிருத்திக்குழுக் கூட்டத்திற்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், வலிகிழக்கு பிரதேச சபை எதிர்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளருமான இ.ஐங்கரன், ஈ.பி.டி.பி.யின் அச்சுவேலி பிரதேச அமைப்பாளர் தர்மராசா மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வடமாகாண தமிழ் இலக்கிய விழா

## நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சும் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து வருடாவருடம் நடத்திவருகின்ற தமிழ் இலக்கிய விழாவானது எதிர்வரும் ஒக்ரோபர் 25,26 ஆம் திகதிகளில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவின், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அரங்கில் நடத்துவதாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற முதலாவது ஆலோசனைக் கூட்டத்தில் முடிவாகியது.

இக்கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர், யாழ். மாநகர மேயர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள், வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் சிவலிங்கராசா எனப் பலரும் கலந்துகொண்டனர.

மேலும் இக்கூட்டத்தில் விழா ஒழுங்குகளும் பல்வேறு குழுக்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இரண்டு நாளும் நடைபெறவுள்ள ஆய்வரங்கில் வடமாகாணத்தில் தமிழ் இலக்கிய சொல்நெறி என்ற விடயப் பொருளில் ஆய்வரங்கமும் 2011 ஆம் ஆண்டில் வடமாகாண படைப்பாளிகளால் வெளியிடப்பட்ட நூல்களில் சிறந்தவையாகத் தெரிவுசெய்யப்பட்டவைக்குச் சிறந்த இலக்கிய நூல் பரிசும், தொடர்ச்சியான கலைச் சேவையினையுடைய 60 வயதினைப் பூர்த்தி செய்த வடமாகாணத்தைச் சேர்ந்த 10 கலைஞர்களுக்கான வடமாகாண உயர விருதான ஆளுநர் விருதும் வழங்கப்படவுள்ளதாகவும், வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளன. (142)

# ஆனந்தபுரத்தில் இன்று மீள்குடியமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆனந்தபுரம், முள்ளியவளை மேற்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இன்று சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

செட்டிகுளம் நலன்புரி முகாமில் தங்கியுள்ள முள்ளியவளை கிராமத்தைச் சேர்ந்த மக்களில் 33 குடும்பங்களைச் சேர்ந்த 104 பேர் 2 பேருந்துகளில் அழைத்து வரப்படுவதுடன், 6 பாரவூர்திகளில் உடமைகள் எடுத்துச் செல்லப்படவுள்ளது. இவர்கள் முள்ளியவளை அ.த.க. பாடசாலையில் தங்கவைக்கப்படவுள்ளனர்.

ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களில் செட்டிகுளம் நலன்புரி முகாமிலுள்ள ஆனந்தகுமாரசாமி நலன்புரி முகாமில் தங்கியுள்ள 70 குடும்பங்களைச் சேர்ந்த 263 பேரும், கதிர்காமர் நலன்புரி முகாமில் தங்கியுள்ள 34 குடும்பங்களைச் சேர்ந்த 126 பேரும் 8 பேருந்துகளில் அழைத்து வரப்படுவதுடன், 13 பாரவூர்திகளில் உடமைகள் எடுத்துவரப்படவுள்ளது.

இவர்கள் இரணைப்பாலை றோ.க.ம.வித்தியாலயத்திலும் தங்கவைக்கப்படவுள்ளனர். இம்மக்களுக்கு குடும்பப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களுக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய், உணவுப்பொதி மற்றும் 3 வேளை சமைத்த உணவுகள் என்பன மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (04)

# மின்தடை பற்றிய அறிவிப்பு

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர் அழுத்த மின்மார்க்கங்களை இணைப்பதற்காகவும் இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் புன்னாலைக்கட்டுவன், அச்செழு, அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம் ஆகிய இடங்கள் தவிர்ந்த யாழ். குடாநாடு முழுவதும், வியாபாரிமூலை, அல்வாய், சக்கோட்டை, பருத்தித்துறை நகரப்பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்

10.09.2012 திங்கட்கிழமை, 12.09.2012 புதன்கிழமை, 14.09.2012 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும பண்டைத்தரிப்பு, சில்லாலை, நிச்சாமம், விளான், இளவாலை, மாதகல், சாந்தை, வடலியடைப்பு, இடும்பன் பிரதேசம், தொல்புரம், சுழிபுரம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். 11.09.2012 செவ்வாய்க்கிழமை மற்றும் 13.09.2012 வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை, வீரவாணி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

# கூடைப்பந்தாட்டப் போட்டியிலிருந்து விலகியது இலங்கை அணி


தென்மண்டல சிரேஷ்ட கூடைப்பந்தாட்ட போட்டி ஹைதராபாத்தில் அண்மையில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. கடந்த 5 வருடங்களாக போட்டியில் பங்கேற்ற இலங்கை அணி திடீரென விலகியது. இலங்கை அரசாங்கத்தின் அறிவுறுத்தலை அடுத்து குறித்த போட்டிகளில் இருந்து விலகியதாக அணி நிர்வாகம் விளக்கமளித்துள்ளது. சென்னையில் கடந்த வாரம் இலங்கைக் கால்பந்து அணி திருப்பியனுப்பப்பட்டது. சென்னையை போன்று ஹைதராபாத்திலும் இலங்கை போட்டியாளர்கள் திருப்பி அனுப்பப்படலாம் என்று இலங்கை அரசாங்கம் அச்சமடைந்ததால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# தென்னமரவாடி கிராமத்தில் 28 வருடங்களின் பின் வாக்குச்சாவடி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவாடி பிரதேசத்தில் 28 வருடங்களின் பின் முதல தடவையாக இம்முறை வாக்குச் சாவடியொன்று அமைக்கப்படவுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்திருந்த மக்கள் அனைவரும் இக்கிராமத்திற்கு திரும்பியுள்ளதால் மாகாண சபைத் தேர்தல்களுக்காக அங்கு வாக்குச்சாவடி அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20)



கிளிநொச்சி, வட்டக்கச்சி மாயவனூரில் பல்லாண்டுகளாக மக்களின் நம்பிக்கையாய் விளங்கி அருளாட்சி செய்யும் சிறிரங்கநாதப் பெருமாள் கோவில் பிரம் மோற்சவத்தில் நேற்று தேர் உற்சவம் நடைபெற்றுள்ளது. கிளிநொச்சியின் பல பகுதிகளில் இருந்தும் கிருஷ்ண பக்தர்கள் காலை மாயவனூரில் திரண்டனர். தேர் கிருஷ்ணஜெயந்தி தினமான நேற்று ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலயத்தில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். ஆலய சூழல் பறவைக்காவடிகளாலும் கற்பூரச்சட்டி, பாற்செம்பு சுமந்தவர்களாலும் நிறைந்து பக்தி வெள்ளமாகக் காணப்பட்டது. அத்துடன் வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாளின் புகழ்பாடும் இறுவட்டு ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.


# தேவை

## வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை
5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு
9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம்
12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


# சட்டத்தரணி கொலை இளம் பெண் கைது

அத்துறுகிரிய பகுதியில் நேற்று அதிகாலை 2.30 அளவில் சட்டத்தரணி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இளம் யுவதி கைது செய்யப்பட்டுள்ளார். அத்துருகிரிய ஜகத் மாவத்தையிலுள்ள வீடொன்றிற்குள் சட்டத்தரணி ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டார். இது குறித்து ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவருவதாவது,

கொலை செய்யப்பட்டவர் 45 வயதுடைய சட்டத்தரணி என்று கூறப்பட்ட போதும் அவர் 1944 ஆம் ஆண்டு பிறந்தவர் எனவும் அவருக்கு வயது 68 எனவும் தெரியவந்துள்ளது. மாத்தறை பகுதியில் வசிக்கும் இவர், மாத்தறையில் தனக்கு இருந்த வீட்டை அண்மையில் விற்பனை செய்துள்ளார். மனைவியுடன் ஏற்பட்ட பிரசசினையால் 25 மற்றும் 29 வயது மகன்களின் தந்தையான இவர் மனைவியை பிரிந்து வாழ்ந்து வந்துள்ளார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் காலியில் இருந்து 1991 ஆம் ஆண்டு பிறந்த 21 வயதுடைய யுவதி ஒருவரை அழைத்து வந்து குறித்த சட்டத்தரணி அத்துறுகிரிய ஜகத் மாவத்தையில் வசித்து வந்துள்ளார். குறித்த இளம் யுவதியுடன் சட்டத்தரணி தொடர்ந்து முரண்பட்டு வந்துள்ள நிலையில், நேற்று இரவு ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து இவர் தாக்கப்பட்டு மேல் மாடியில் இருந்து கீழே தள்ளிவிடப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

சட்டத்தரணியை தாக்க பயன்படுத்தப்பட்ட முட்டி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து குறித்த இளம் யுவதி பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தை அடுத்து பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். இக்கொலையுடன் யுவதிக்கு தொடர்பு இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் நிலையில் வேறு யாராவது இதற்கு ஒத்துழைப்பு வழங்கினார்களா என பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். மரண விசாரணையை கடுவளை நீதவான் மேற்கொண்டதோடு பிரேத பரிசோதனையை கொழும்பு சட்டவைத்திய அதிகாரி மேற்கொள்ளவுள்ளார்.

## றொபேட் பிளெக் இலங்கை வருகிறார்

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபட் ஓ பிளெக் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். செப்ரெம்பர் 12 ஆம் திகதி இலங்கை வரவுள்ள அவர் செப்ரெம்பர் 14 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து அரசாங்க மற்றும் எதிர்க்கட்சிப் பிரமுகர்களை சந்தித்து பேசவுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.